

නාවැලි NAAVELI

# நாவெளி





பிரதேச செயலக மாதாந்த மின்னிதழ்

Divisional Monthly e-Magazine ප්‍රාදේශීය මාසික ඉ-සඟරාව

மலர்: 04 ✦ இதழ்:19 ✦ 2024ஆம் வருடம் சித்திரை மாதம் இருபத்தைந்தாம் திகதி


## “உரித்து உங்கள் உரிமை”இன்று ஆரம்பமாகின்றது.




நிருபர்.R.சுவர்க்கா.

“உரித்து உங்கள் உரிமை” எனும் தொனிப்பொருளில் தேசிய வேலைத்திட்டத்திற்கு வலுச்சேர்க்கும் நோக்கில்...அரச காணிகளுக்கான ஆவணங்களை பொதுமக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் புதியதோர் மாறுபட்ட வேலைத்திட்டத்தின் அடிப்படையில் நாவிதன்வெளிப் பிரதேச செயலகம் தனது சேவையினை இன்று முன்னெடுத்துள்ளது. காணிக்கான ஆவணங்கள் இன்றி பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு நாட்டின் ஜனாதிபதி அவர்களின் எண்ணக்கருவுக்கு அமைய செயற்படுத்தப்படும் சிக்கலில்லா நிலத்தின் முழுமையான உரிமத்தை அனைவருக்கும் உரித்தாக்கும் உன்னத நோக்கில் ஆரம்பித்து வைக்கப்பட்ட உருமய வேலைத் திட்டத்தினை துரிதப்படுத்தும் ஒர் உயரிய நோக்கிலும், தேசிய வேலைத் திட்டத்திற்கு வலுச் சேர்க்கும் நோக்கிலும் “உரித்து உங்கள் உரிமை” எனும் தொனிப்பொருளில் நடமாடும் சேவையானது சாளம்பைக்கேணி - 02 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்று 2024.04.25ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இதுவரை பொதுமக்களுக்கு நில அளவைகள் திணைக்களத்தின்

தொடர்ச்சி 07ஆம் பக்கம்...

## துரித மயப்படுத்தப்படும் காணிக் கச்சேரி



நிருபர்.NMM.A.சுஜான்.

அனைத்து மக்களுக்கும் காணிக்கான ஆவணத்தை வழங்கும் உரிய நோக்கில் காணிக் கச்சேரிகள் நாவிதன்வெளிப் பிரதேசம் எங்கும் பிரதேச செயலக காணிப்பிரிவினரால் துரிப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில், நாவிதன்வெளிப் பிரதேச செயலகப் பிரிவில் இதுவரை காணி ஆவணம் இன்றி இருப்பவர்கள், வருடாந்த அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்கள், குத்தகையில் காணி ஆவணம் பெறத் தகுதியானவர்கள் போன்றோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு,

தொடர்ச்சி 07ஆம் பக்கம்...

## பிரதேச மட்ட சகவாழ்வு சங்கம் இஸ்தாபிப்பு



நிருபர். A.சசிகலா.

நாட்டில் காணப்படுகின்ற இன,மொழி,மற்றும் மதங்களுக்கிடையே சமரசம்,சகவாழ்வு, நல்லிணக்கம் போன்றவற்றை ஏற்படுத்தும் பாரிய ஒரு வேலைத் திட்டத்தின்கீழ் பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் சகவாழ்வுச் சங்கங்கள் இஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு தேசிய ஒருமைப் பாட்டுப் அமைச்சின் பிரிவின், இனங்களுக்கிடையே ஒற்றுமை மற்றும் மகிழ்ச்சியான சகவாழ்வு வாழ்கின்ற இலங்கையர் எனும் அடையாளத் துடனான இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்பும் தேசிய வேலைத் திட்டமான கிராமங்கள், பிரதேசங்கள், மாவட்டங்கள் தோறும் சக வாழ்வுச் சங்கத்தினை உருவாக்கும் நோக்கின் ஒரு அங்கமாக, நாவிதன் வெளிப் பிரதேச செயலகத்துக்கான சகவாழ்வுச் சங்கம் அமைக்கும் பொதுக் கூட்டம் 2024.04.17ஆம் திகதி நாவிதன்வெளிப் பிரதேச செயலக “நாவெளி” கலாசார மத்திய நிலையத்தில் பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது பிரதேச செயலாளர் தனது தலைமையுரையில், இன மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும், சகவாழ்வையும்,

தொடர்ச்சி 07ஆம் பக்கம்...

## வாகை சூடிய பெண்கள் அணி.



நிருபர்.P.வசந்த்.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின அம்பாறை மாவட்டத் திற்கான குழுநிலைப் போட்டிகள் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன. அந்தவகையில் கடற்கரைக் கபடி, கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியானது 20.04.2024 ஆந் திகதி நிந்தவூர் கடற்கரையில் நடைபெற்றன. இப் போட்டியில் பெண்கள் பிரிவில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்கான அணி இரண்டு போட்டிகளிலும்

தொடர்ச்சி 07ஆம் பக்கம்...

## ஆசிரியரிடமிருந்து...

நாவெளிமலர் - 04 இல் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் அளவற்ற மகிழ்ச்சி. நாலா பக்கமும் பரந்து கிடக்கின்ற பல்வேறு செய்திகள், மற்றும் பல்சுவை அம்சங்களைத் தாங்கிய வகையில் நாவெளி மலர் - 04 வெளிவருகின்றது. உண்மையில் "நாவெளி" மின்னிதழ் வாசகர்கள் மத்தியில் எதிர்பார்க்கை ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது என்பதை அறியக் கிடைத்த போது புதிய மகிழ்வொன்று வெளிப்பட்டதை என்னால் உணர முடிந்தது. அத்தகைய மகிழ்வினைத் தந்த "நாவெளி" வாசகர்களுக்கு இதயம் கனிந்த நன்றிகள். அதேபோல் நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்தின் பரந்து பட்டபார்வைப் பரப்புக்குள் இருந்து வெளிவருகின்ற "நாவெளி" மின்னிதழ் சஞ்சிகை உங்களை மேலும் உற்சாகப்படுத்தத்தான் போகின்றது. அதற்காக நாமும் செயற்பட வேண்டிய கடப்பாடும் இருக்கின்றது.

எதிர்பார்ப்புகள் இல்லாமல் ஒரு சராசரி மனிதனால் வாழ முடியுமா? அவ்வாறானதொரு எதிர்பார்ப்பு எத்தகையது. 1. மற்ற மனிதர்கள் இப்படி இருக்க வேண்டும் அல்லது இது செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பது. 2. நிகழ்வுகள் இப்படித்தான் நிகழ வேண்டும் எனும் எதிர்பார்ப்பு, என எதிர்பார்ப்புகள் இரண்டு விதமாக இருக்கின்றன.

எதிர்பார்ப்பு ஒருவகையில் ஆசை அல்லது விருப்பமாக இருக்கலாம். முற்றும் துறந்த துறவி கூட, தான் இவ் ஊனுடம்புடன் சொர்க்கம் அடைய வேண்டும் என்றும், இறைவனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்ப்பது இயல்பு. சுத்தமாக எதிர்பார்ப்புக் களே இல்லாமல் ஒருவரால் வாழ முடியாது. ஆனால் மிகக் குறைந்த எதிர்பார்ப்புகளோடு வாழப்பழகிக் கொள்ள முடியும்.

கீழ்க் கண்ட விடயங்களைப் பற்றிய புரிதல் நமக்கு எதிர்பார்ப்புகளை க் குறைக்க உதவும். நம் குழந்தையானாலும், நம் துணையானாலும் ஒவ்வொருவரும் தனித்தனி நபர்களாகவே வாழ்கின்றனர் அல்லவா?.

அவர்களுக்கென்று தனியே மூளை கொடுக்கப்பட்டிருப்பது, தானே சிந்திக்க வேண்டும் என்பதற்காகத்தான். எனவே, அவரவர்களுக்கெ ன்று தனித்தனியே ஆசைகள், மற்றும் சிந்தனைகள் உண்டு.

நம்முடைய அனுபவமும், மற்றவர்களுடைய அனுபவமும் ஒரே மாதிரி இருப்பதில்லை. அதுவும் மாறுபட்டே காணப்படுகின்றது.

நம் வாழ்க்கைமுறை அல்லாத வேறுசில நல்ல வாழ்க்கை முறைகளும் இருக்கின்றன. நாம் அந்த வாழ்க்கை முறைகளை வாழ்ந்து பார்க்காததால் அவை சரியா?, தவறா ? என்பது தெரியாத நிலையிலேயே வாழ்ந்து வருகின்றோம். சிலநேரம் அத்தகைய வாழ்வு சரியாகவும் இருக்கக் கூடும்.

இவ்வுலக வாழ்வில் நாம் நினைப்பது எல்லாம் அப்படியே நடப்பதில்லை. அப்படி நடக்காது என்று வாழ்ந்து விட்டுப் போவதே நல்லது. அத்தகைய எண்ணமே வாழ்க்கையின் சிறப்புத் தன்மை.

என்றும் அன்புடன்...

---ஆசிரியர்---

# விசேட இப்தார் நிகழ்வு



நாவிதன்வெளி பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த விசேட இப்தார் நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச செயலக திறந்த வெளியரங்கில் கணக்காளர் கே. றிஸ்வி யஹ்சர் ஒருங்கிணைப்போடு பிரதேச செயலாளர் திருமதி . ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் வரலாற்றில் ஒரு தசாப்த கால இடைவெளிக்குப் பிறகு நடைபெற்ற இந்த இப்தார் நிகழ்வுக்கு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு விசேட உரையாற்றினார்.

இப்தார் விசேட மார்க்க சொற்பொழிவை நாவிதன்வெளி ஜம்இய்யத்துல் உலமா சபை தலைவரும்,, கல்முனை அல்-அமையா அரபுக் கல்லூரியின் தலைவருமான அஷ்ஷெய்க் ஏ.சி தஸ்தீக் (மதனி) நிகழ்த்தினார்.

இந்த இப்தார் நிகழ்வில், உதவி பிரதேச செயலாளர் பி. பிரணவரூபன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராஜா , நிர்வாக உத்தியோகத்தர் கே. யோகேஸ்வரன், உட்பட அலுவலகத்தில் கடமையாற்றும் தமிழ் - முஸ்லிம் உத்தியோகத்தர்கள் இனநல்லுறவோடு இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

-ஏ.எல்.எம்.ஷினாஸ்

ஒரு புத்தகத்தை வாசிக்கும்போது நமக்கு அதுவரை தெரியாத விஷயங்கள் தெரியவரும். நம்முடைய பொதுப்புத்தியில் அதுவரை தெரிந்த தகவல்கள், உண்மைகள், விழுமியங்கள், எல்லாவற்றைப் பற்றியும் கேள்விகள் உருவாகும்.அறிவுப்பரப்பு ஒரு மில்லிமீட்டராவது விசாலமாகும். நம்முடைய உணர்வுகள் கூர்மையடையும் நாம் அதுவரை நம்பியிருந்த உண்மைகள் பொய்களாக மாறும். நம்முடைய வீடு, ஊர், மாவட்டம், மாநிலம், நாடு, இனம், மதம், சாதி, மொழி, இவையாவும் மறைந்து போகும். பிரபஞ்ச மனிதனாக உணரமுடியும்.உலகின் எந்த மொழிபேசும் மனிதர்களின் வாழ்வை, அவர்களுடைய பண்பாட்டை, பழக்கவழக்கங்களை, அந்த மொழி தெரியாமலேயே புரிந்துகொள்ள முடியும்.ஒரு புத்தகத்தை வாசிக்கும்போது நம்முடைய மூடநம்பிக்கைகள் ஒழிந்து அறிவியல் பார்வை உருவாகும். சனாதனத்துக்கும் மரபுக்கும் நவீனத்துக்கும் உள்ள வேறுபாடுகள் தெரியும். வரலாற்றுக்கும் புராண இதிகாசங்களுக்கும் உள்ள வித்தியாசம் புரியும். நாம் வாழும் சமூகத்துக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற ஆவல் ஏற்படும். புத்தகம் மனிதகுலத்தின் அறிவுச்சொத்து. வாசியுங்கள்!



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் 2009 ஆண்டிற்கு முன் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த (ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று அங்கத்தவர்களுக்கான குடும்ப உறுப்பினர்களுக்கான வீட்டுத் திட்டம்) அமைச்சின கீழ் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் 6 இலட்சம் பெறுமதியான வீட்டுத் திட்டத்திற்கு 15 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு தற்கால பொருட்களின் விலையேற்றம் காரணமாக அரச நிதியின் ஒதுக்கீடு 9,000,000.00 போதாமையினால் மேலும் 50% இற்கும் அதிகமான பங்களிப்புடன் பயனாளிகளினால் பங்களிக்கப்பட்டு பெரும் சிரமத்தின் மத்தியில் முடிவுறுத்தப்பட்டு வசித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இதே போன்று 10 இலட்சம் பெறுமதியான வீட்டுத் திட்டத்திற்கு 14 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 14,000,000.00 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்கால பொருட்களின் விலையேற்றம் காரணமாக அரசினால் வழங்கப்பட்ட நிதி போதாமையினால் பயனாளிகளின் 50மூ இற்கும் அதிகமான பங்களிப்புடன் சிரமத்தின் மத்தியில் முடிவுறுத்தப்பட்டு வசித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு – 2023

| தொ.இல | பயனாளியின் பெயர் | கி.உ.பிரிவு | அரச நிதியுதவி (ரூபா.) | பயனாளியின் பங்களிப்பு (ரூபா.) |
|---|---|---|---|---|
| 1 | லியோ ஞானப்பிரகாசம் | சொறிக்கல்முனை – 01 | 600,000.00 | 700,000.00 |
| 2 | செ. பொன்மலர் | மத்தியமுகாம் – 01 | 600,000.00 | 700,000.00 |
| 3 | க. பஞ்சாட்சரம் | மத்தியமுகாம் – 01 | 600,000.00 | 600,000.00 |
| 4 | எம்.எ. தாஜீதீன் | சாளம்பைக்கேணி – 05 | 600,000.00 | 600,000.00 |
| 5 | எஸ் அருள்ராசா | மத்தியமுகாம் – 02 | 600,000.00 | 700,000.00 |
| 6 | பி. துரைராசா | நாவிதன்வெளி – 02 | 600,000.00 | 1,200,000.00 |
| 7 | எஸ். கணேசன் | சொறிக்கல்முனை – 02 | 600,000.00 | 700,000.00 |
| 8 | எ. குமுதினி | மத்தியமுகாம் – 02 | 600,000.00 | 500,000.00 |
| 9 | எம். ஆனந்தி | மத்தியமுகாம் – 05 | 600,000.00 | 400,000.00 |
| 10 | வை. லூர்த்துமெரி | சொறிக்கல்முனை – 01 | 600,000.00 | 700,000.00 |
| 11 | ரி. யோகேஸ்வரி | மத்தியமுகாம் – 03 | 600,000.00 | 800,000.00 |
| 12 | கே. கமலேஸ்வரி | மத்தியமுகாம் – 03 | 600,000.00 | 600,000.00 |
| 13 | க. பாலகிருஸ்ணன் | மத்தியமுகாம் – 01 | 600,000.00 | 500,000.00 |
| 14 | என். சுந்தரலெட்சுமி | சொறிக்கல்முனை – 02 | 600,000.00 | 600,000.00 |
| 15 | எம்.எஸ். வல்கீஸ் | மத்தியமுகாம் – 04 | 600,000.00 | 600,000.00 |
| **மொத்தம்** | | | **9,000,000.00** | **9,900,000.00** |

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு – 2023

| இல | பயனாளியின் பெயர் | கி.சேவகர் பிரிவு | அரச பங்களிப்பு | பயனாளியின் பங்களிப்பு |
|---|---|---|---|---|
| 1 | யு.மு.சல்மா | சாளம்பைக்கேணி-04 | 1,000,000.00 | 1,000,000.00 |
| 2 | ஞ.சித்திரவேல் | மத்திய முகாம் - 04 | 1,000,000.00 | 800,000.00 |
| 3 | மு.தவலெட்சுமி | மத்திய முகாம் - 02 | 1,000,000.00 | 1,300,000.00 |
| 4 | வு.நந்தகுமார் | நாவிதன்வெளி - 01 | 1,000,000.00 | 850,000.00 |
| 5 | மு.பேரின்பம் | நாவிதன்வெளி - 01 | 1,000,000.00 | 1,500,000.00 |
| 6 | நு.இலங்கேஸ்வரன் | நாவிதன்வெளி - 02 | 1,000,000.00 | 1,800,000.00 |
| 7 | ே.தர்மலிங்கம் | நாவிதன்வெளி - 02 | 1,000,000.00 | 1,500,000.00 |
| 8 | மு.சிதம்பரப்பிள்ளை | அன்னமலை-01 | 1.000,000.00 | 600,000.00 |
| 9 | மு.ஜெயா | அன்னமலை-01 | 1,000,000.00 | 650,000.00 |
| 10 | ஞ.கோகுலவர்த்தனி | சவளக்கடை | 1,000,000.00 | 600,000.00 |
| 11 | ஏ.தயவதி | சொறிக்கல்முனை-03 | 1,000,000.00 | 980,000.00 |
| 12 | யு.ஜீவராணி | மத்தியமுகாம்-05 | 1,000,000.00 | 700,000.00 |
| 13 | ஆ.ஹாசிம் நஜீமா | சொறிக்கல்முனை-03 | 1,000,000.00 | 1,000,000.00 |
| 14 | மு.யோகலெட்சுமி | சொறிக்கல்முனை-03 | 1,000,000.00 | 950,000.00 |
| **மொத்தம்** | | | **14,000,000.00** | **14,230,000.00** |

T.சசிதேவி

# விவசாயத் துறையை அச்சுறுத்தும் வரட்சி!



இலங்கையின் விவசாயத் துறை தற்போதைய காலநிலையால் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது. அண்மைக்காலத்தில் இல்லாதளவுக்கு வாட்டி வதைக்கும் வரட்சி விவசாயத்து றைக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையப்போகின்றது. நீர்ப்பாசனம் பாதிக்கப்ப டப் போகின்றது. நிலத்தடி நீர் வற்றிப்போகக் கூடிய நிலை கிணறுகளையேநம்பி விவசாயம் செய்யும் எம்மவர்களுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தும். அரசாங்கமும் இவ்விடயத்தில் உடனடிக் கவனம் செலுத்த வேண்டும். நேற்று சனிக்கிழமை வயலில் வேலை செய்துகொண்டி ருந்த ஒருவர் மயங்கிவிழுந்து இறந்திருக்கின் றார். திருமலை, மூதூர் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. வயல், தோட்ட வேலைகள் இந்த நிலைமையால் மிகவும் பாதிக்கப் படப்போகின்றது என்பதற்கு இது ஒரு உதாரணம். வடக்கு கிழக்குப் பகுதிகள் இந்த அதிகரித்த வெப்பத்தால் அதிகம் பாதிக்கப்பட்டி ருக்கின்றது. கணிக்க முடியாத மழைப்பொழிவு மற்றும் வறட்சியின்அதிகரிப்பு நீர் பற்றாக்குறை -க்கு வழிவகுக்கிறது, இது நெல் போன்ற பாசனத்தை சார்ந்த பயிர்களுக்கு முக்கியமான து. இது பயிர் விளைச்சலையும்.

உற்பத்தித் திறனையும் பெருமளவுக்குக் குறைக்கிறது. கடுமையான மழை வெள்ளம், பயிர்கள் மற்றும் நீர்ப்பாசன கால்வாய்கள் போன்ற உள்கட்டமைப்புகளை சேதப்படுத்தும். ,தனால் விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்டு மண் அரிப்பு ஏற்பட்டு மண்வளம் குறைகிறது. கடந்த டிசெம்பரில் இவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டிருந்தது. அதிக வெப்பநிலை பயிர்களை எதிர்மறையாக பாதிக்கலாம், குறிப்பாக முக்கியமான வளர்ச்சி நிலைகளில். வளர்ச்சி குன்றியது, குறைந்த மகசூல் மற்றும் உற்பத்தியின் தரம் குறைவதற்கு வழி வகுக்கிற து வெப்பமான வெப்பநிலை பூச்சிகள் மற்றும் நோய்களின் வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்குகிறது. , கணிசமான பயிர் இழப்புகளுக்கு வழிவகுக்கும்.

மற்றும் பூச்சிக் கொல்லிகளின்அதிகபயன்பாடு தேவைப்படுகிறது, உணவு பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை பாதிக்கிறது. கரையோர நிலங்களுக்குள் உப்பு நீர் உட்புகுவதால் அவை விவசாயத்திற்குப் பொருத்தமற்றதாகிவிடும் தாழ்வான கரையோரப் பகுதிகளில் உள்ள நெற் பயிர்க ளுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. உணவுப் பாதுகாப்பு காலநிலை மாற்றம் இலங்கையின் உணவுப் பாதுகாப்பைப் பாதிக்கிறது. குறைக்கப்பட்ட விவசாய உற்பத்தி உணவுப் பற்றாக்குறை மற்றும் விலை உயர்வுக்கு வழிவகுக்கும், மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களை பாதிக்கிறது. இவ்வாறாயினும், புதுமையான தீர்வுகளை பின்பற்றுவதன் மூலமும், தழுவல் உத்திகளை நடைமுறைபடுத்துவதன் மூலமும் இலங்கை யானது பின்னடைவைக் கட்டியெழுப்ப முடியும் மற்றும் அதன் விவசாய உற்பத்தியி ன் நீண்டகால நிலைத்தன்மையை உறுதிப் படுத்த முடியும்.

தகவல் மூலம்– தமிழர் பொருண்மியம்

**அரசின் 2024 ஆம் ஆண்டின் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான இலவச அரிசி வழங்கும் தேசிய வேலைத் திட்டத்திற்கு நாவிதன்வெளி பிரதேச செயலகப்பிரிவில் இருந்து 4828 குடும்பங்கள் தெரிவு.**

சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் 2024 ஆம் ஆண்டுக்கான குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கும் தேசிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக நிதி பொருளாதார வலுப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு வெளியீட்டுள்ள சுற்று நிருபத்திற்கு அமைய நலன்புரி திட்டங்களிலு ள்ள ஒரு பயனாளி குடும்பத்திற்கு தலா 10 கிலோகிராம் அரிசி இரண்டு மாதங்களுக்கு வழங்கப்படும். இது தொடர்பில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி மாவட்டச் செயலாளரின் முன்முயற்சியின் கீழ் இடம்பெறவுள்ள இவ்வினியோக திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவு பிரதேச செயலக மட்டத்தில் தயாரிக்கப்படும். இதன்படி கிராம உத்தியோகத்தர், பொருளா தார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்து பயனாளிகள் தெரிவுக்கான வேலைத்திட்டம் விரைவுபடுத் தப்பட்டுள்ளன. அதன் பிரகாரம்,

அஸ்வெசும பயனாளிகள்– 2395, 2023 டிசம்பர் முன் சமூர்த்திபயனாளிகள்– 1092, முதியோரி கொடுப்பனவு பெறுனர்கள் – 224, மாற்றுத்திறனாளிகள்– 11, நாட்பட்ட சிறுநீரக நோயாளர்கள்– 11, வருமானம் குறைந்த பிரதேச செயலாளரின் பரிந்துரை செய்யப்பட்ட– 990, வருமானம் குறைந்த பி.செ. அனுதாப அடிப்படையிலான– 06 மொத்தமாக 4828 குடும்பங்கள் இன் நன்மைகளை பெறறுக் கொள்ள்ள தகுதியுடையோராக தெரிவு செய்யப்பட்டுள் ளனர்.

அஸ்வெசும பயனாளிகள், 2023 டிசம்பர் மாதத்த்கு முன்னர் சமூர்த்தி மானியம் பெற்ற பயனாளிகள்,மேற்குறித்த வகுதிக்குள்வராத நிதி உதவி பெறும் முதியோர்கள், மாற்றுத்தினாளிகள் மற்றும் நாட்பட்ட நோயால் பாதிக்கப்பட்டோர்கள், நிவாரணம் குறித்து முறைப்பாடு செய்ய முடியாத சமூர்த்திக்கு உரித்துடைய பிரதேச செயலாளரினால் பரிந்துரைக்கப்ப டும் வருமானம் குறைந்த குடும்பங்கள். அஸ்வெசும, மற்றும் பிரதேச செயலாளரின் பரிந்துரை பெற்ற வருமானம் குறைந்த குடும்பங்கள் என்ற வகதிக்குள்வராத பிரதேச செயலாளரின் தனிப்பட்ட அனுதாப அடிப்படையிலான குடும்பங்கள் என இன் நன்மைகளைப் பெற தகுதியான குடும்பங்கள் இவ் ஐந்து வகுதிக்குள் இடம் பெற்றுள்ளன.

அதன் அடிப்படையில் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவின் 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இருந்து இத்திட்டத்தின் கீழ் , தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எம்.ஐ.இஸ்ஹாக்
அபிவருத்தி இணைப்பு உத்தியோகத்தர்.

# இஸ்ரேலைத் தாக்கத்தயாராகும் ஈரான்: அமெரிக்காவுக்கு எச்சரிக்கை



ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியமைக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் தெரிவித்துள்ளது. அண்மையில் சிரியா நாட்டின் தலைநகர் டமாஸ்கசில் ஈரான் துணை தூதரகம் மீது இஸ்ரேல் திடீரென வான்வழித் தாக்குதலை நடத்தியது.

இந்தநிலையில் அமெரிக்காவுக்கு ஈரான் கடிதம் ஒன்றை அனுப்பியது. ஈரான் ஜனாதிபதியின் அரசியல் விவகாரத்திற்கான பணியாளர் துணைத் தலைவர் முகம்மது ஜம்தி எழுதிய அந்த கடிதத்தில் நெதன்யாகுவின் வலையில் சிக்க வேண்டாம். அதிலிருந்து அமெரிக்கா விலகியிருக்க வேண்டும். அதனால் நீங்கள் தாக்குதலில் இருந்து தப்புவீர்கள் எனத் தெரிவித்துள்ளார். இதற்குப் பதிலாக அமெரிக்க இலக்குகள் மீது தாக்குதல் நடத்த வேண்டாம் என்று ஈரானிடம் அமெரிக்க அரசு கேட்டுக் கொண்டுள்ளது என ஜம்ஷிதி கூறியுள்ளார். குறிப்பாக பொது மக்களை விட இஸ்ரேலுக்குள் ராணுவம் அல்லது நுண்ணறிவு இலக்குகளை நோக்கி இந்த தாக்குதல் நடத்தப்பட கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனினும் எப்போது தாக்குதல் நடத்தப்படும் என்றோ நேரடியாகவா அல்லது லெபனானில் பதுங்கி உள்ள ஹிஜ்புல்லா பயங்கரவாத குழுக்களை கொண்டுதாக்குதல் நடத்துமா என்ற விவரம் எதுவும் வெளிவரவில்லை.

# ரஸ்யா உக்ரைனை ஊடுருவியுள்ளதை தொடர்ந்து மாறியுள்ள ஜேர்மன் மக்க –ளுடைய மனநிலைமை:




ரஸ்யா உக்ரைனை ஊடுருவியுள்ளதைத் தொடர்ந்து மாறியுள்ள ஜேர்மன் மக்களுடைய மனநிலைமையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. நாளை தங்களுடன் ஒரு நாடு போருக்கு வருமானால் தங்களுக்கு ஆதரவாக நேட்டோ அல்லது ஐரோப்பிய ஒன்றியம் போன்றதொரு அமைப்புத் தேவை என ஜேர்மனியர்கள் பலர் கருதுகிறார்கள்.உலகம் முழுவதும் பாதுகாப்புக்கு ஒரு அச்சுறுத்தல் உள்ளது என ஜேர்மனியர்கள் கருதும் நிலையில் ஜேர்மனியர்கள் பத்தில் ஏழு பேர் ஐரோப்பாவில் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் உள்ளது எனகருதுகிறார்கள். இந்த எண்ணம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னிருந்ததை விட தற்போது பலமடங்கு அதிகரித்துள்ளது.ஜேர்மனியும் தனது இராணுவத்தை வேகவேகமாக வலுப்படுத்தகின்றது. உக்ரைனை ரஸ்யா ஊடுருவியுள்ளதைத் தொடர்ந்து ஜேர்மன் இராணுவத்தை நவீனப்படுத்த 100 பில்லியன் யூரோக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஜேர்மன் தாக்குதலுக்கு உள்ளாகுமானால் அதை எதிர்கொள்ள ஜேர்மன் இராணுவம் மீள்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. இந்நிலையில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் நேட்டோவுடனான உறவின் அவசியம் குறித்து ஜேர்மனியர்களிடம் கேள்வி எழுப்பப்பட்ட போது சுமார் 82 சதவிகிதம் பேர் ஐரோப்பாவில் அமைதியை நிலைநிறுத்த அது அவசியம் எனக் கருதுவதாக தெரிவித்துள்ளனர். அதேபோல ஐரோப்பாவில் பாதுகாப்பான வாழ்வுக்கு ஐரோப்பிய ஒன்றியம் அவசியம் என மூன்றில் இரண்டு ஜேர்மனியர்கள் கருதுவதாக தெரிவித்துள்ளார்கள். ஐரோப்பிய ஒன்றியத்தில் ஜேர்மனி உறுப்பினராக இருப்பதற்கான ஆதரவு கடந்த ஆண்டைவிட ஜேர்மனியில் அதிகரித்துள்ளது. மூன்றில் ஒருவர் ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பினராக இருப்பது ஜேர்மனிக்கு நல்லது எனக் கருதுகிறார்கள். ஆக மொத்தத்தில் ரஸ்யா உக்ரைனை ஊடுருவியுள்ளதைத் தொடர்ந்து நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் தொடர்பில் ஜேர்மன் மக்களுடைய மனநிலை மையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது தெளிவாகியுள்ளது.

# இந்தியாவிற்கு அமெரிக்கா வழங்கியுள்ள ஆதரவு



ஐ.நாவின் பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவை நிரந்தர உறுப்பினராக்க அமெரிக்கா மீண்டும் ஆதரவு தெரிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை முதன்மை துணை செய்தி தொடர்பாளர் வேதாந்த கூறும்போது, நாம் வாழும் 21–ம் நூற்றாண்டின் உலகத்தை பிரதிபலிக்கும் வகையில் பாதுகாப்பு கவுன்சில் உட்பட ஐ.நா. அமைப்புக்கான சீர்திருத்தங்களை நாங்கள் நிச்சயமாக ஆதரிக்கிறோம். அது என்ன என்பது குறித்து என்னிடம் எந்த விவரமும் இல்லை, ஆனால் நிச்சயமாக நாங்கள் அதை அங்கீகரிக்கிறோம் என கூறியுள்ளார்.ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் 15 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது. இதில் வீட்டோ அதிகாரம் கொண்ட 5 நிரந்தர உறுப்பினர்கள் (அமெரிக்கா, சீனா, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா) மற்றும் 2 ஆண்டுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 10 நிரந்தரமற்ற உறுப்பினர்கள் உள்ளனர். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவை நிரந்தர உறுப்பினராக்க தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்று இந்தியா கோரி உள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# பதவி விலகும் சிங்கப்பூர் பிரதமர் - எழுந்துள்ள குற்றச்சாட்டு



சிங்கப்பூர் நாட்டின் பிரதமரான லீ சியென் லூங் (Lee Hsien Loong) பதவிவிலகவுள்ளதாக அறிவித்து ள்ளார். தற்போது, பிரதமர் லீ சியென் லூங் (Lee Hsien Loong) தலைமையிலான மக்கள் செயல் கட்சியின் ஆட்சி நடைபெற்று வருகின்றது. இவரது பதவி விலகல் குறித்து மேலும் தெரியவருகையில்,அண்மை க்காலமாக இந்த கட்சியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன.

-P.குமர்

# பேராசிரியரின் யாசகம் ( சிறுகதை)

இறந்த தனது தாய் தந்தையின் புகைப்படத்தை பார்த்தவாறும், ஒளியிழந்த தனது தந்தைக்கு வழிகாட்டிய தூசுபடிந்த தந்தையின் மூக்குக் கண்ணாடியை தழுவியவாறும்தந்தையது ஞாபகங்களை கண்களில் மீட்டியவாறும் பல வருடங்களுக்குப் பிறகு நீண்ட ஓய்வு நாட்கள் இப்போதுதான் கிடைத்துள்ளதால் தான் பிறந்த சொந்தக் கிராமத்தில் தனது தாய் வீட்டிற்கு வந்த பேராசிரியர்,தமது தாய் தந்தையின் அர்ப்பணிப்புக்கள் கண்களில் ஊசலாட அருகிலிருந்த சாய்மானக் கதிரையில் சாய்ந்தவாறு அமர்ந்திருந்தார்.

கொழும்பு பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலைப் பேராசிரியர் தான் ஒரு நீண்ட நாவலை எழுத அந்த பழைய வீடுதான் அவருக்கு பொருத்தமென்றெண்ணி தனிமையில் அமர்ந்தவருக்கு நாவலின் தொடக்கத்தை எழுத ஆரம்பித்த வேளை பொழுதுகழிந்து இரவு நேரம் போனதே தெரியால் எழுதிக் கொண்டிருக்கையில் பசி வயிற்றை கிள்ளியதும் சற்று எழுந்து நாவல் கதையை யோசித்தவாறே நடந்து சென்ற அவர் தன்னை அறியாமலேயே கிராமத்து ஒற்றையடிப் பாதையின் வழியே நீண்ட தூரம் நடந்து பிரதான வீதியருகில் உள்ள ஒரு சிறிய உணவகம் இருப்பதைக் கண்டார்.

பசியின் உத்வேகத்தாலும் நடந்த களைப்பாலும் உணவகத்திலுள்ள மேசையில் அமர்ந்து அங்குள்ள இடியப்பம் சுடச் சுட இருப்பதை கண்டு பசிக் களைப்பால் அதனை நன்கு வயிறாரச் சாப்பிட்டு விட்டு கைகளைக் கழுவி நிமிரும்போது“சாப்பிட்டதற்கு முன்னூறு ரூபாய் கணக்கு” என்று முதலாளி கூறியதும் தனது சட்டைப் பைக்கற்றுக்குள் பணமெடுக்க கையை விட்டபோதுதான் தெரிந்தது அதில் பணப்பை இல்லையென்று. வரும் வழியில் யாரும் அதனை களவாடியிருக்கக் கூடும் அல்லது தவறுதலாக விழுந்திருக்கக் கூடும் என்ற எண்ணத்தில் தனது ஏனைய சட்டை பைக்கற்றுகளில் தேடுகிறார் பணம் ஏதும் இல்லை. மணி இரவு பத்தாகிறது. மெல்ல எழுந்து முதலாளியிடம் “ஐயா எனது பணம் வீட்டில் இருக்கிறது நான் மறந்து போய் பணத்தை எடுக்காமல் வந்து விட்டேன் கொஞ்சநேரம் தந்தால் எடுத்து வருவேன்..” என கனிவான குரலில் கேட்டார் பேராசிரியர்.“என்ன விரட்டுறயா? உன்னை யாரென்றே தெரியாது, இப்படி எத்தனை பேர் கிளம்பியிருக்கிறீங்க பொய் சொல்ல..? அந்த கதையெல்லாம் சரிவாது உன்ட சேட்டையும் சாறனையும் களட்டி வைத்துவிட்டு நீ போய் எடுத்து வா” என்ற அதட்டலாக குரலில் கடைமுதலாளி கூறியதும் தன் நிலை அறிந்த அவருக்கு கணப்பொழுதில் தனது கௌரவத்தையும் அதற்கு வந்த இழுக்கையும் எண்ணித் தலைகுனிந்தார்.

தனது நியாயத்தைக் கூற அவருக்கு இடம் கொடுக்கவில்லை அந்த மிருகத்தனமான முதலாளி. அந்த கடையில் உள்ளவர்களின் கண்களெல்லாம் அவர் நிர்வாணத்திற்காகவே காத்திருந்தன, தான் எத்தனை கல்விமான்களை உருவாக்கியிருந்தும் இவ்விடத்தில் தன்னை காக்க ஒரு மனிதன் இல்லாததை எண்ணி தலைகுனிந்தார். வாழ்வில் எத்தனை கோடிகள் உழைத்திருப்பார்? எவ்வளவு பேருக்குக் கொடுத்திருப்பார்,ஆனால் இன்று ஒரு முன்னூறு ரூபாய்க்கு இப்படியாகிவிட்டதையெண்ணி கண் கலங்கினார். “களட்டு கெதியா களட்டு சேட்டை..” என்ற ஆவேச அதட்டலான வார்த்தையை தாங்காது அங்குள்ள படித்தவர் படிக்காதவர் என அனைவரின் கண்களும் அவரை நோக்க தனது சட்டையை களட்ட கைவைத்த போது “யோவ் நிப்பாடுயா, உனக்கு எவ்வளவு பணம் கொடுக்கனும் அவரு? முன்னூறுதானே இந்தா! அந்தக் காசு அவரை விடு” என்ற ஒரு அற்ப குரல் பணத்தை நீட்டியது. பேராசிரியர் மானம் தப்பித்தது என்று எண்ணி தன்னைக் காப்பாற்றிய அந்தப் புண்ணியவானை நோக்கினார். கந்தல் ஆடையும், தோளில் கிழிந்த பையுடனும் கலைந்த சுருட்டை முடியும் உடல் அழுக்கும் உள்ளத்தூய்மையும் கொண்ட ஒரு பிச்சைக்காரனே அவன். ஆனால் அவன் அங்கு அவருக்குத் தெய்வமாகத் தோன்றினான். “வாங்க ஐயா” என பேராசிரியரது கைகளை இழுத்துக்கொண்டுபோய் “ஏனைய்யா இவ்விடத்தில வரும்போது கவனமா வாறல்லையா? இவனுகள் காசு என்றால் என்னவும் செய்வானுகள்...சரி....சரி நான் இப்ப வரும்போது வழியில் கண்டெடுத்த ஒரு பணப்பை உள்ளது இது உங்கள் பணப்பையா என்று பாருங்கள்” என தனது பையை விரித்து காட்டினான் அப் பிச்சைக்காரன். “என்ன இது” என்றேன். “ஐயா நான் ஏழைதான் யாருமில்லாத அநாதைதான் இந்த ஹோட்டலின் ஓரமிருந்து கிடைப்பதை சாப்பிட்டு கையேந்துபவன் தான். ஆனால் நான் ஒரு மனிதன்தான். அந்த ஹோட்டல் முதலாளியைப்போல மிருகமல்ல. நான் கிடைப்பதை கொண்டு வாழ்பவன். அரைசாண் வயிறுப்பசியை போக்கும் எண்ணமே என் மனதில் உள்ளதே தவிர ஆட்கள் மனதைக் கொன்று பணம் பெறுவதல்ல. நான் இதுகாலவரையில் யாசகம் பெறும் வழியில் பொறுக்கிய சில பணப்பைகள் உள்ளன. இதில் உங்கள் பை இருக்கிறதா என பாருங்கள்” எனக்கூறி தனது யாசகப் பையை திறந்து காட்ட அதில் சில பணப் பைகளுடன் பேராசிரியரது பணப்பையும் ஊதா நிறத்தில் தெரிந்தது. அதில் நிறையப் பணமும் இருந்தது. ஆனால் அவர் அதை எடுக்காது. “இல்லை இதில் எனது பணப்பை இல்லை என கூறி அவ் யாசகனின் தோளை தடவி நன்றி கூறிப்புறப்பட்டார். அவ் விடத்தில் அவருக்கு தனது பணப்பையை அவனிடத்திலிருந்து எடுக்க மனம் வரவில்லை. சூழ்நிலையால் உடலளவில் தான் அவன் யாசகன் ஆனால் உள்ளத்தில் அவன் மனிதப் பெருந்தகைப் பணக்காரன் என்று எண்ணி நடந்தார் பேராசிரியர்.

...முற்றும்...

## “மர்மக்கிராமம்”
## (மர்மத் தொடர்...)
## வீரர்பதி - அருள் மல்லிகா
## (கடந்த மாத இதழின் தொடர்ச்சி...)

பின்னாலிருந்து யாரோ இருவரையும் தள்ளி விட்டாற்போல் காற் தடுக்கி இருவரும் நிலத்தில் கீழே விழுந்தனர். ரோச் லைட் உடைந்தது, எங்கும் இருட்டுமயம், கேட்ட அந்த அலறல்சத்தம் இப்போது இல்லை. சுற்று முற்றும் பார்த்து திகைத்து நின்ற இருவரும் ஒருவரையொருவர் விடையில்லாக் கேள்விபோல் முகத்தை பார்த்துக்கொண்டு நிற்கையில்“காலையில வந்து பார்ப்பமே, இப்போ வெளிச்சமும் இல்ல” என நல்லதம்பியை சண்முகம் அழைக்கஅவரும் அவ்விடம் நடந்த மர்மம் புரியாமல் அதற்கிசைந்து அங்கிருந்து விலகி எல்லையம்மன் ஆலய விளக்கொளியின் வழிகாட்டுதலில் இருவரும் வீடுவந்து சேர்ந்தனர். “என்ன ஐயா? என் மகளை பார்த்தீங்களா? என்னவாயிற்று...? என தேம்பியழுத கண்ணம்மாவின் கேள்விக்கு “நாளை போய் காமன்சில விசாரிப்பம், அவள் யாராவது கூட வேலைசெய்யிற பிள்ளையின் வீட்ட தங்கி நிற்கலாம் தானே” என ஆறுதல் கூறி தேற்றும் வகையில் விடயளித்த நல்லதம்பிக்கு காலையில் சென்று விசாரிக்கும் வரை கண்ணில் நித்திரையில்லாது யோசனையில் ஆழ்ந்து இருந்தான்.

காலைக் கதிரவனும் கண்விழிக்க முதல் வேலையாக கண்ணம்மாவை அழைத்துக்கொண்டு நல்லதம்பி காமன்சிக்கு புறப்பட்டான். அங்கு சென்றதும் அவ் நிலைய காவலாளி உட்பட அனைத்து வேலையாளர்களும் கூறிய ஒரே பதில் கண்ணம்மாவின் மகளான சாந்திநேற்று ஐந்து மணிக்கே வேலை விட்டு வீட்டுக்குப்புறப்பட்டுவிட்டாள் என்பதே. நடந்தது புரியாது திகைத்த கண்ணம்மாவை சமாதானப்படுத்திய ஊர் தலைவர் “எதுக்கும் வா கண்ணம்மா நாம் போய் பொலீஸில் ஒரு முறைப்பாடு கொடுத்திட்டுப் போவம்” எனக் கூறி ஊரிலிருந்து பல மைல் தொலைவிலுள்ள பொலீஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாட்டையும் கொடுத்துவிட்டு நேரத்துக்கு ஊருக்குச் செல்லும் ஒரே ஒரு பேருந்து வண்டியையும் பிடித்து தன் ஊர் எல்லைவரை வந்தடைந்தனர்...(அடுத்த இதழில் தொடரும்)

(அருளானந்தம் சுதர்சன்)

## உரித்து உங்கள் உரிமை...

கடல்திரள் வரை படத்தினையும் அடிப்படையாகக் கொண்டு 145 ஏக்கர் நிலப்பரப்புக்கு வழங்கப்பட்ட 179 (காணித் துண்டுகளை) காணி ஆவணங்களை உரித்து தேசிய வேலைத் திட்டத்திற்குள் உள்வாங்குவதற்கும்,அரசகாணி தொடர்பான ஆலோசனைகளை மக்களுக்கு வழங்குவதற்கும் என குறித்த வேலைத்திட்டம் பிரதேச செயலாளர் அவர்களின் வழிகாட்டலில், காணிக் கிளை உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

குறித்த துரித வேலைத் திட்டத்தில் மாதந் தோறும் ஒரு கிராமப் பிரிவு இவ் வேலைத்திட்டத்திற்கு என தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், உரித்து ஆவணங்களை வழங்குவதற்கான நாட்டின் ஜனாதிபதி அவர்களின் தேசிய நோக்கும் மக்களுக்கு சென்றடையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துரித மயப்படுத்தப்பட்ட காணிக் கச்சேரி ...

அவை பரீட்சிக்கப்பட்டு, அதன் பின்னரான அனுமதியுடன் காணிக்கச்சேரிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வருடத்துக்கான முதற் காலாண்டில் 243 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று அவற்றுக்கு காணி ஆவணங்கள் வழங்கும் நோக்கில் காணிக் கச்சேரிகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனடிப்படையில், மத்தியமுகாம் - 1(13), -2(22), -5(5), -6(18), அன்னமலை -1(16), -2(22), நாவிதன்வெளி - 2(39), அன்னமலை-3(6), சொறிக்கல்முனை -3(1), சவளக்கடை-(1), சாளம்பைக்கேணி - 4(54),-5(2), மத்திய முகாம் -5(5),-6(18) ஆகிய கிராமப் பிரிவுகளுக்கு காணிக் கச்சேரிகள் நடைபெற்றுள்ளதுடன், ஏப்பிரல் 26ஆம் திகதி சவளக்கடை- (44) கிராமப் பிரிவுக்கும் காணிக் கச்சேரி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்தினால் இரண்டாம் காலாண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதன் அடிப்படையில், காணிக்கான ஆவணம் அற்றோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 2024.05.20ஆம் திகதிக்கு முன்னர் காணி அமைந்துள்ள பிரிவின் கிராம உத்தியோகத்தர்களிடம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் எனும் அறிவித்தல் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

## பிரதேச மட்ட சகவாழ்வு சங்கம் ...

புரிந்துணர்வையும் ஏற்படுத்துவது என்பது சாதாரண முயற்சியல்ல. ஆயினும் அதனை முயன்று செயற்படக்கூடிய ஒரு மனிதத்துவம் மிக்க ஒரு கட்டமைப்பு நாவிதன்வெளிப் பிரதேச செயலகப் பிரிவில் ஆரம்பிக்கப்படுகின்றது எனத் தெரிவித்தார்.தொடர்ந்து, பிரதேச செயலாளர் அவர்களால், யாப்பு விதிகள் எடுத்துரைக்கப்பட்டதுடன் நாவிதன் வெளிப் பிரதேச பிரிவிலுள்ள 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் சகவாழ்வுச் சங்கப் பிரதிநிதிகளைக் கொண்டு இப்பிரதேச சகவாழ்வுச் சங்கம் இஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதன் போது தலைவராக திரு. சாமித்தம்பி செல்வ சிகாமணி அவர்களும், உபதலைவராக திருமதி. நல்லராசா பிருந்தா அவர்களும், பொருளாளராக திரு.குணநாதம் புவனரூபன் அவர்களும், செயலாளராக திரு. சின்னமரைக்கார் அமீன் அவர்களும், உபசெயலாளராக திரு. சாஜஹான் அஸீம் அஹமட் அவர்களும் மற்றும் 16 உறுப்பினர்களும், பதவிவழி அரச உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்பட்டனர்

இந்நிகழ்வில் சமயத் தலைவர்கள் சொற்பொழிவு ஆற்றியதுடன், பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர், நிருவாக கிராம உத்தியோகத்தர், நிதி அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமிய சகவாழ்வுச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

## வாகை சூடிய பெண்கள் அணி...

வெற்றி பெற்று முதலிடத்தினைப்பெற்றுக் கொண்டது. இதேவேளை, 21.04.2025 ஆந் திகதி அம்பாறையில் நடைபெற்ற பெண்களுக்கான கிரிக்கட் சுற்றுப்போட்டியிலும் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டனர். இச் சுற்றுப் போட்டியில் சம்மாந்துறை, அம்பாறை, தெய்யத்தகண்டி ஆகிய பிரதேச செயலக பிரிவிற்குரிய அணிகள் பங்குபற்றியிருந்தன. மேலும் 22.04.2024 ஆந் திகதி அம்பாறையில் நடைபெற்ற எல்லே சுற்றுப் போட்டியில் அம்பாரை, தெய்யத்தகண்டி ஆகிய பிரதேச பிரிவுக்குரிய அணிகளை வென்று முதலிடத்தைப் பெற்றுக் கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வெற்றிகளைத் தொடர்ந்து கடற்கரை கபடி, கடற்கரை கரப்பந்து, எல்லே, கிரிக்கெட் ஆகிய போட்டிகளில் அம்பாரை மாவட்டம் சார்பாக, மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவுக்கான ராணமடு விளையாட்டுக் கழக மகளிர் அணியினர் தெரிவாகியுள்ளனர் என்பது பாராட்டத்தக்கது.

இவ்விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் மற்றும் அவர்களை பயிற்றுவித்து உற்சாகப்படுத்திய உத்தியோகத்தர்களுக்கும் நாவிதன்வெளி பிரதேச செயலகம் தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது.

மாவட்ட மட்ட 4 குழுநிலைப் போட்டிகளில் சம்பியனாக நாவிதன்வெளி பெண்கள் அணியினர் வெற்றிவாகை சூடியுள்ளனர். கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அம்பாறை மாவட்டத்திற்கான குழுநிலைப் போட்டிகள் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் கடற்கரைக் கபடி, கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியானது 20.04.2024 ஆந் திகதி நிந்தவூர் கடற்கரையில் நடைபெற்றன. இப் போட்டியில் பெண்கள் பிரிவில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்கான அணி இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்று முதலிடத்தினைப் பெற்றுக் கொண்டது.

இதேவேளை,21.04.2025ஆந்திகதி அம்பாறையில் நடைபெற்ற பெண்களுக்கான கிரிக்கட் சுற்றுப்போட்டியிலும் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டனர். இச் சுற்றுப் போட்டியில் சம்மாந்துறை, அம்பாறை, தெய்யத்தகண்டி ஆகிய பிரதேச செயலக பிரிவிற்குரிய அணிகள் பங்கு பற்றியிருந்தன. மேலும் 22.04.2024ஆந் திகதி அம்பாறையில் நடைபெற்ற எல்லே சுற்றுப் போட்டியில் அம்பாரை, தெய்யத்தகண்டி ஆகிய பிரதேச பிரிவுக்குரிய அணிகளை வென்று முதலிடத்தைப் பெற்றுக் கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வெற்றிகளைத் தொடர்ந்து கடற்கரை கபடி, கடற்கரை கரப்பந்து, எல்லே, கிரிக்கெட் ஆகிய போட்டிகளில் அம்பாரை மாவட்டம் சார்பாக, மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவுக்கான ரணமடு விளையாட்டுக் கழக மகளிர் அணியினர் தெரிவாகியுள்ளனர் என்பது பாராட்டத்தக்கது.

இவ்விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் மற்றும் அவர்களை பயிற்றுவித்து உற்சாகப்படுத்திய உத்தியோகத்தர்களுக்கும் நாவிதன்வெளி பிரதேசசெயலகம் தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

## இந்து சமய வழிபாட்டில் உளவியல்

கடந்த மாத இதழின் தொடர்ச்சி... Y.ஜெசேரம்பிரியன்*

இதனால் மனமானது ஓய்வாகவும் புத்துணர்புடனும் சாந்தமாகவும் காணப்படும் என ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். ஆனால் எமது முன்னோர்கள் எமது அன்றாட செயற்பாடுகளில் ஒன்றாக அமைத்து எமது மனநலம் பேண வழிவகுத்துள்ளமை சிறப்பம்சமாக நோக்கததக்கது. ஆலயங்களில் பூஜை முடிந்ததும் அங்கு பிரசாதங்களாக கொடுக்கப்படுகின்ற சந்தனம், குங்குமம், மஞ்சள் என்பனவற்றை நாங்கள் நெற்றியிலே பூசுகிறோம். இங்கு ஒர் உண்மை இருக்கின்றது. என்னவெனில், மனிதனின் நரம்பு மண்டலங்கள் எல்லாம் நெற்றியிலே குவிவதனால் நெற்றியில் சந்தனத்தைப் பூசுகின்ற போது அவ்விடம் குளிர்வடைய ஏனைய உடம்பின் எல்லாப் பகுதிகளும் குளிர்வடைகின்றது.

தொடரும்...

## குறுக்கெழுத்துப் போட்டி இல.03 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 தா | லா | 2 ட் | டு | ■ | 3 ப | 4 க | ல் |
| வ | ■ | டு | ■ | 5 ர | சி | ம் | ■ |
| 6 ர | 7 ம் | ப | 8 ம் | ■ | ■ | 9 ப | னி |
| 10 ம் | ர | ■ | 11 த | ங் | 12 க | ம் | ■ |
| ■ | 13 பை | 14 ர | வி | ■ | ண் | ■ | 15 த் |
| 16 வ | ■ | வை | ■ | ■ | 17 ணா | ண் | அ |
| 18 லை | 19 சோ | ■ | 20 க | 21 ண் | டி | ■ | னி |
| ■ | 22 டி | கோ | ■ | பு | ■ | 23 சு | தி |

### வெற்றியீட்டியவர்கள்

**1ம் பரிசு**

NMM.A.சுஜான்
சம்மாந்துறை

**2ம் பரிசு**

M.சகிக்கா
சொறிக்கல்முனை-1

**3ம் பரிசு**

R.ளுபிகா-மண்டூர்

### பாராட்டு பெறுவோர்

A.ரம்மியா – வீரமுனை.

அ.சுதர்சன் – வீரமுனை.

ம.யொனோறி – கல்முனை.

E.தனிரோசன் – கல்முனை.

J.ஜெசிலா பர்வின் – நற்பிட்டிமுனை.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.04

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | |
| | ■ | 5 | | ■ | | ■ | ■ |
| 6 | | | ■ | 7 | | | 8 |
| ■ | ■ | | ■ | | ■ | ■ | |
| 9 | | ■ | 10 | | ■ | 11 | |
| | ■ | ■ | | ■ | 12 | | ■ |
| ■ | 13 | | | ■ | | ■ | 14 |
| 15 | | ■ | 16 | | | | |

### இடமிருந்து வலம்

01. காலில் அணிவது.
04. இது சுருங்குதல் பெண்களுக்கு அழகாம்.
05. முக்கனிகளில் ஒன்று (திரும்பி)
06. பறவைகளில் சிறியது.
07. வேலை மிகுதியால் ஏற்படுவது.
09. இதனால் பூனை அடுப்பங்கரை நாடாதாம்.
10. புறாவை நினைத்தால் இவர் நினைவுக்கு வருவார்.
11. வழக்காடுபவர்.
12. நீரில் வரும் இதனை எண்ணுவது கடினம்.
13. ஒரு காலத்தில் இதுவும் விளக்கெரிய பயன்பட்டது.(குழம்பி)
15. சமுத்திரத்திற்கு இன்னுமொரு பெயர்.
16. இவன் பலவான் என்பர்.

### மேலிருந்து கீழ்

01. காயந்த இலைகளைக் குறிக்கும்.
02. இப்படி ஒரு மீனினம் உண்டு (குழம்பி).
03. நட்புக்கு எதிரானது. (தலைகீழ்).
04. இதுவும் வடிவங்களில் ஒன்று.
07. குற்றமிழைத்தவர் இது எண்ண வேண்டும் என்பர்.
08. அறிவு என்றும் சொல்லலாம்.
09. திருடுதலின் ஒரு வடிவம்.
10. இதுவும் ஒரு மருந்துதான்.
11. குமரிப்பெண்களுக்கு அடையாக சொல்வர்.
12. பொழுதுகளில் ஒன்று.
13. இதை வெட்டக்கூடியவர்கள் சமூகத்தில் அதிகமானோர் உண்டு.
14. மருத்துவ குணம் மிக்கது.

இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2024.05.15 ஆம் திகதி பி.ப.4.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்) என்பவற்றையும் அனுப்பவும்.




முதலாம் பரிசு : 200/=
இரண்டாம் பரிசு : 150/=
மூன்றாம் பரிசு ~100/=

**WIN A RELOAD**

# வாசிப்பின் முக்கியத்துவம்

தற்காலத்தில் அரச தொழில் துறைகளில் வேலை வாய்ப்புகள் வழங்க போட்டிப் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. அதில் மொழித் திறன் மற்றும் பொது அறிவு வினாக்கள் கேட்கப்படும். அவ்வாறு போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற வாசிப்புத் திறனானது மிகப் பெரிய பங்கினை வகிக்கிறது. ஆரம்ப காலத்தில் வாசிப்பை புத்தகம் மற்றும் பத்திரிகை மூலமே தான் கட்டியெழுப்பப்பட்ட ஒன்றாகும். தற்போது நாங்கள் தகவல்களை பெறுவதற்கு இலத்திரனியல் செய்திகள், புலமைசார் இலத்திரனியல் ஆய்வறிக்கைகள், கட்டுரைகள் போன்றவைகளை வாசிப்பதற்கும் பழகிக் கொண்டு இருக்கிறோம். அதுமட்டுமல்லாது "ஒரு சிறந்த வாசிப்பாளன் தான் சிறந்த எழுத்தாளன்" எழுத்தாற்றல் குறைந்த பிள்ளையைப் பற்றி ஓர் ஆய்வில் அந்தப் பிள்ளையின் வாசிப்புத் திறன் குறைவாக இருந்தமையே காரணம் எனக் கண்டறியப் பட்டிருக்கின்றது.தற்காலத்தில் அரச தொழில் துறைகளில் வேலை வாய்ப்புகள் வழங்க போட்டிப் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. அதில் மொழித் திறன் மற்றும் பொது அறிவு வினாக்கள் கேட்கப்படும். அவ்வாறு போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற வாசிப்புத் திறனானது மிகப் பெரிய பங்கினை வகிக்கிறது.

ஆரம்ப காலத்தில் வாசிப்பை புத்தகம் மற்றும் பத்திரிகை மூலமே தான் கட்டியெழுப்பப்பட்ட ஒன்றாகும். தற்போது நாங்கள் தகவல்களை பெறுவதற்கு இலத்திரனியல் செய்திகள், புலமைசார் இலத்திரனியல் ஆய்வறிக்கைகள், கட்டுரைகள் போன்றவைகளை வாசிப்பதற்கும் பழகிக் கொண்டு இருக்கிறோம். அதுமட்டுமல்லாது "ஒரு சிறந்த வாசிப்பாளன் தான் சிறந்த எழுத்தாளன்" எழுத்தாற்றல் குறைந்த பிள்ளையைப் பற்றி ஓர் ஆய்வில் அந்தப் பிள்ளையின் வாசிப்புத் திறன் குறைவாக இருந்தமையே காரணம் எனக் கண்டறியப்பட்டிருக்கின்றது.ற்காலத்தில் அரசதொழில் துறைகளில் வேலை வாய்ப்புகள் வழங்க போட்டிப் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. அதில் மொழித் திறன் மற்றும் பொது அறிவு வினாக்கள் கேட்கப்படும். அவ்வாறு போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற வாசிப்புத் திறனானது மிகப் பெரிய பங்கினை வகிக்கிறது. ஆரம்ப காலத்தில் வாசிப்பை புத்தகம் மற்றும் பத்திரிகை மூலமே தான் கட்டியெழுப்பப்பட்ட ஒன்றாகும்.த தற்போது நாங்கள் தகவல்களை பெறுவதற்கு இலத்திரனியல் செய்திகள், புலமைசார் இலத்திரனியல் ஆய்வறிக்கைகள், கட்டுரைகள் போன்றவைகளை வாசிப்பதற்கும் பழகிக் கொண்டு இருக்கிறோம். அதுமட்டுமல்லாது "ஒரு சிறந்த வாசிப்பாளன் தான் சிறந்த எழுத்தாளன்" எழுத்தாற்றல் குறைந்த பிள்ளையைப் பற்றி ஓர் ஆய்வில் அந்தப் பிள்ளையின் வாசிப்புத் திறன் குறைவாக இருந்தமையே காரணம் எனக் கண்டறியப்பட்டிருக்கின்றது.தற்காலத்தில் அரச தொழில் துறைகளில் வேலை வாய்ப்புகள் வழங்க போட்டிப் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. அதில் மொழித் திறன் மற்றும் பொது அறிவு வினாக்கள் கேட்கப்படும். அவ்வாறு போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற வாசிப்புத் திறனானது மிகப் பெரிய பங்கினை வகிக்கிறது. ஆரம்ப




காலத்தில் வாசிப்பை புத்தகம் மற்றும் பத்திரிகை மூலமே தான் கட்டியெழுப்பப்பட்ட ஒன்றாகும். தற்போது நாங்கள் தகவல்களை பெறுவதற்கு இலத்திரனியல் செய்திகள், புலமைசார் இலத்திரனியல் ஆய்வறிக்கைகள், கட்டுரைகள் போன்றவைகளை வாசிப்பதற்கும் பழகிக் கொண்டு இருக்கிறோம். அதுமட்டுமல்லாது "ஒரு சிறந்த வாசிப்பாளன் தான் சிறந்த எழுத்தாளன்" எழுத்தாற்றல் குறைந்த பிள்ளையைப் பற்றி ஓர் ஆய்வில் அந்தப் பிள்ளையின் வாசிப்புத் திறன் குறைவாக இருந்தமையே காரணம் எனக் கண்டறியப்பட்டிருக்கின்றது.

தற்காலத்தில் அரச தொழில் துறைகளில் வேலை வாய்ப்புகள் வழங்க போட்டிப் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. அதில் மொழித் திறன் மற்றும் பொது அறிவு வினாக்கள் கேட்கப்படும். அவ்வாறு போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற வாசிப்புத் திறனானது மிகப் பெரிய பங்கினை வகிக்கிறது. ஆரம்ப காலத்தில் வாசிப்பை புத்தகம் மற்றும் பத்திரிகை மூலமே தான் கட்டியெழுப்பப்பட்ட ஒன்றாகும். தற்போது நாங்கள் தகவல்களை பெறுவதற்கு இலத்திரனியல் செய்திகள், புலமைசார் இந்த சுவாரஸ்யமான வாசிப்பில் ஒரு பக்கம் மகிழ்ச்சியும் இன்னொரு பக்கம் அறிவு வளர்ச்சியும் ஏற்படுகிறது. இது ஒரு இனத்துக்கோ, சமூகத்துக்கோ, வயதிற்கோ உட்பட்டது அல்ல. அனைவருக்கும் வாசிப்பு எல்லையற்றது. சிறுவயதிலிருந்தே எமது குழந்தைகளுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி இந்நாட்டிற்கு தகவல் திறனுக்கும், கல்விசார் திறனுக்கும் மிகமிக முக்கியமான தாக வாசிப்பு ஒன்றே சமூகத்தில் திகழ்கிறது. வாசிப்பு தெரியாத விடயங்களைத் தெரிந்து அறிந்த ஒருவனாக மனிதனை மாற்றுகின் றது.

வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணப்படுத்துவ துடன், அவனிடம் இருக்கும் தீயவிடயங்கள், கவலை, கோபம் மற்றும் பயம் என்பவற்றில் இருந்து அவனை தூரமாக்குகின்றது. தீயவழியில் செல்லக் கூடிய ஒரு மனிதனுக்கு நேர்வழியைக் காட்டி அவனுக்கு நல்வாழ் வை ஏற்படுத்த வழி செய்கிறது. வாசிப்பு என்பது ஓய்வுக்காக வாசித்தல், தகவல்களை ப் பெறுவதற்காக வாசித்தல், அறிவைப் பெறுவதற்காக வாசித்தல் போன்ற பல காரணங்களுக்காக ஒருவர் வாசிக்கலாம். வாசிப்பு என்பது ஒரு மகிழ்ச்சிகரமான சுவாரஸ்யமான ஒரு விடயமாகும்.

நல்ல நற்பிரஜைகளை உருவாக்குவது ஒவ்வொரு பெற்றோர்களின் கடமையாகும். தகவல் திறனுக்கும் கல்விசார் திறனுக்கும் மிகமிக முக்கியமானதாக வாசிப்பு ஒன்றே சமூகத்தில் திகழ்கிறது. எங்கெல்லாம் அறிவு கொட்டிக் கிடக்கின்றதோ அங்கெல்லாம் அறிவைத் தேடிப் பெற்றுக் கொள்வது மாணவர்களாகிய எமது பொறுப்பாகும். ஒரு தனிமனிதனின் வெற்றிக்கு மிகப் பெரிய பங்கு வகிக்கிறது வாசிப்பு என்றால் அது மிகையாகாது. வாசிப்பின் முக்கியத்துவம் தற்காலத்தில் சஞ்சிகைகள், இணையத்தள -ங்கள் என்பன பல்வேறுபட்ட கவிதை, கட்டுரை, பொது அறிவு போன்ற விடயங்க ளை வெளியிடுகின்றன. ஆதனை முழுவதுமாக வாசித்து தனது வாசிப்புத் திறனை அதிகரிக்கச் செய்யமுடியும்.ஓய்வு நேரத்தை ப் பயனுள்ளதாக கழிப்பதற்கும் பல்வேறுபட்ட செய்திகள் மற்றும் விடயங்களை தெரிந்து கொள்ளவும் நூலகத்திற்குச் செல்ல வேண்டும். அதன் மூலமாக எங்களது அறிவு விருத்தியடைகின்றது. ஆகவே,வாசிப்புப் பழக்கத்தை சிறு பராயத்தில் இருந்து பிள்ளைகளுக்கு கொடுப்போம்.

மு. பாத்திமா லனா
அஸ்- சிராஜ் மகாவித்தியாலயம்.
Unique சிறுவர் கழகம்
சாளம்பைக்கேணி-04

# 13வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம்



இம்முறை G.C.E (O/L) 2021 பெறுபேற்றினைப் பெற இருக்கும் மாணவர்களின் கவனத்திற்கு அனைத்துப்பாடங்களிலும் று என்ற சித்தியின்மையினைப் பெற்றிருந்தாலும் உயர்தரம் (A/L) இரண்டு வருடங்கள் கற்று பல்கலைகழகம் சென்று பட்டம் பெறுவதற்கான சந்தர்ப்பத்தினை தற்போது கல்வி அமைச்சு வழங்கியுள்ளது. இதன் விபரம் பின்வருமாறு.

தற்போதுள்ள Bio, Maths, Commerce, Arts, E-Tech, B-Tech என்ற 6 பிரிவுகளுக்கும் மேலதிகமாக 7 ஆவது பிரிவாக தொழில் பிரிவு (Vocational Stream) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது O/L பரீட்சைப் பெறுபேற்றினைப் பெற்ற உயர்தரத்திற்கு இணையவுள்ள 2021/2023 ஆம் ஆண்டின் மாணவர்களுக்கும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

**1 ஆம் வருடம்**

1ஆம் வருடத்தில் மீதமாகவுள்ள 2ஆம் 3ஆம் தவணைகளில் 26 பாடங்களில் (c.jh: QS, Web Designing, ICT, பொறியியல், மின்னியல், Plumbing, Hotel Management, பெண் அலங்காரம் போன்ற இன்னும் சில பாடங்கள்) இதில் கட்டாயம் 3 பாடங்களினை எடுத்தாக வேண்டும்.

**2 ஆம் வருடம்.**

1ஆம் வருடத்தில் 2ஆம் 3ஆம் தவணையில் எடுத்த மூன்று பாடங்களிலும் ஏதாவது ஒரு பாடத்தினை தெரிவு செய்து 2ஆம் வருடம் முழுவதும் அப்பாடம் ஒன்றினையே கற்று உயர்தரப் பொதுப்பரீட்சையில் அப்பாடமொன்றிலேயே பரீட்சை எழுதி பல்கலைகழகம் செல்ல முடியும். உதாரணமாக 2ஆம் வருடத்தில் QS என்ற ஒரு பாடத்தினைக் கற்ற ஒருவர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற முடியும். தற்போது பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச ரீதியான பல்கலைக்கழகமொன்று ரத்மலானையில் தொழில்நுட்ப பிரிவு பல்கலைகழகமாக தொழிற்பட்டுக்கொண்டு வருகின்றது. இலங்கையில் ஏலவே 40 இற்கு மேற்பட்ட பாடசாலைகளில் தொழில் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

2020/2021 இல் சகல பல்கலைக்கழகங்களிலும் தொழில் பிரிவு பீடம் ஆரம்பிக்கப்படவுள்ளது. உயர்தர பொதுப்பரீட்சையில் தொழில் பிரிவு மாணவர்கள் S தரத்தில் சித்தி பெற்றாலும் பழ்கலைக்கழகம்தான் போக முடியாவிட்டாலும் NVQ Level 4 (National Vocational Qualification Level 4) இனைப் பெற்றுக் கொள்ள முடியும்.பல்கலைக்கழகம் சென்றுதான் NVQ Level 7 இனைப் பெற வேண்டும் என்பதல்ல. அம்பாறை ஹாட்லி தொழில்நுட்பக் கல்லூரி போன்றவற்றிடமிருந்தும் பெற்றுக் கொள்ள முடியும்.

# நாவிதன்வெளி பிரதேசத்தில் 2வது விசேட கல்வி அலகு ஆரம்பம்.

நாவிதன்வெளி பிரதேசத்தில் 2ஆவது விசேட கல்வி அலகொன்று வீரத்திடல் அல் – ஹிதாயா மகா வித்தியாலயத்தில் 01-03-2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வானது பாடசாலை அதிபர் திருமதி. A.M. முனாசிர் தலைமையில் நடைபெற்றதோடு, பிரதம அதிதியாக நாவிதன்வெளி பிரதேச செயலாளர் R.ராகுலநாயகி அவர்கள் கலந்து கொண்டிருந்தார். கௌரவ அதிதிகளாக நாவிதன்வெளி கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. P.பரமதயாளன் மற்றும் நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி Dr.N. ரமேஸ் அவர்களும், சிறப்பு அதிதியாக DSR நிறுவன பணிப்பாளர் அருட்தந்தை G.A. சதீஸ் அவர்களும் ஏனைய அதிதிகளாக பாடசாலை உப அதிபர், ஆசிரிய ஆலோசகர் கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் Deaflink நிறுவன அதிகாரிகளும் பங்கேற்றனர்.



அன்றைய தினம் சொறிக்கல்முனை, சாளம்பைக்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 5 மாணவர்கள் இவ் விசேட கல்வி அலகில் மீளிணைக்கப்பட்டனர். இவர்களில் சிலர் வறுமை, போக்குவரத்து வசதியின்மை போன்ற காரணங்களால் பாடசாலையை விட்டு இடைவிலகியிருந்தனர். இவர்களது தகவல்கள் பிரதேச செயலக அதிகாரிகளினால் சேகரிக்கப்பட்டு சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தின் அனுமதியுடன் மாணவர்கள் இலகுவாக சென்று வரக்கூடிய இடத்தில் இக்கல்வி அலகு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான பௌதீக வசதிகள்,ஆசிரியருக்கான சம்பளம் என்பவற்றை 2 வருடங்களுக்கு னுநயகடiமெ நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது. அத்துடன் நாவிதன்வெளி பிரதேசத்தில் இன்னும் பல விசேட தேவையுடைய மாணவர்கள் இக்கல்வியை பெறாமல் உள்ளனர். இவர்களை இணங்கண்டு கல்வி அலகில் இணைப்பதற்கான செயற்பாடுகள் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இக்கல்வி அலகு ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் D. ஜாசுகி மற்றும் Deaflink நிறுவன அம்பாறை மாவட்ட இணைப்பாளர் P.இளையராஜா ஆகியோர் ஒழுங்கு படுத்தியிருந்தனர்.

D. ஜாசுகி

**"நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு" என்ற ஔவையாரின் வரிகள் இந்த உலகில் ஒரு மனிதன் எந்த அளவுக்கு நூல்களை வாசிக்கின்றானோ, அந்த அளவுக்கு அவன் அறிவினை பெற்றுக்கொள்கின்றான் என கூறுகின்றது.**

# அரசாங்கத்தின் காணி

கடந்தமாத இதழின் தொடர்ச்சி...



NMM A. Sujan,
Colonization Officer,

அரசாங்க காணியை பல பகுதிகளாகப் பிரிக்க முடியும்.

**1. பகிர்ந்தளிக்கக் கூடிய காணி**
**2. பகிர்ந்தளிக்க முடியாத காணி**

பகிர்ந்தளிக்கக்கூடிய காணி என்றால், என்ன என்பதனை முதலில் பார்ப்போம். வேறு விசேட செயற்பாடுகளுக்காக ஒதுக்க முடியாத பகிர்ந்தளிப்பதற்கு தகுதியான காணிகளே இவ்வாறு அழைக்கப்படும். இவை பிரதேச செயலாளரின் பொறுப்பில் இருக்கும் (இவை முன்னர் ஆளுநரின் காணி என அழைக்கப்பட்டது). இவ்வாறு பகிர்ந்தளிக்கக்கூடிய காணிகளில் பெரும்பாலானவை பகிர்ந்தளிக்கப்பட்டு விட்டன. பகிர்ந்தளிக்கக் கூடிய காணிகள் சிறிய அளவிலேயே எஞ்சியுள்ளன.

அரசாங்கத்தின் சார்பில் இந்தகாணிகளை பகிர்ந்தளிக்கக் கூடிய பல நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் காணி ஆணையாளர் நாயகம், மாகாணக்காணி ஆணையாளர், பிரதேச செயலாளர், வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நகரஅபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை மகாவலி அதிகார சபை, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சபை போன்றவை உள்ளடங்குகின்றன.

ஆனால், மேலே குறிப்பிட்ட அதிகாரிகள் மற்றும் நிறுவனங்கள் அனைத்தும் காணி பகிரல் சட்ட திட்டங்களின் அடிப்படையிலேயே, காணி பகிர்தலை முன்னெடுப்பர். அதற்கு வெளியே, தன்னிச்சையாக காணி பகிர்ந்தளிப்பதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது.

### 1.4 பொதுக் காணிகளை அறிந்து கொள்ளல்.

பொதுக் காணிகள் என்பது பொதுமக்களின் நலன்கருதி ஒதுக்கப்பட்டுள்ள இடங்களாகும். இவற்றை சட்டவிரோதமாக கைப்பற்றல் அல்லது தனியார் தேவைக்குப் பயன்படுத்தல் என்பன சமூகத்திற்கு விரோதமான செயற்பாடாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது ஜனநாயகக் கடமையாகும். குறிப்பிட்ட வரைபடங்களைப் பரிசோதித்து, காணி குறித்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளை (சனத்தொகைக் கணக்கெடுப்பு அதிகாரி, கிராமசேவகர்) ஆய்ந்து, குறித்தகாணி பொதுக் காணியா என்பதனை அறிந்து கொள்ளலாம்.பொதுக் காணிகளைப் பாதுகாப்பதற்கு நீங்கள் அளிக்கக் கூடிய பங்களிப்பு:

1. சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து பாதுகாப்பதற்கு செயற்படல்.
2. சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்களை பிடிப்பதற்கு அல்லது இயலுமாயின் அவர்களை அகற்றுவதற்கு அரசாங்க அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.

### 1.5 பகிர்ந்தளிக்க முடியாத காணிகள் என்பவை எவை?

பகிர்ந்தளிக்க முடியாத காணிகள் எனக்குறிப்பிடப்படுபவை, பாதுகாக்கப்பட்ட இடங்களாகும். அதாவது பாதுகாக்கப்பட வேண்டிய, மனிதர்களின், தனிநபர்களின் பாவனைக்கு வழங்க முடியாத அல்லது வழங்கக் கூடாத இடங்களாகும். பகிர்ந்தளிக்க முடியாத பாதுகாக்கப்படவேண்டி இடங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படும்:

1. வனவிலங்கு பாதுகாப்பு இடங்கள் (அபாயகரமான பகுதி வனவிலங்கு சரணாலயம்)
2. வனப்பாதுகாப்பு திணைக்களத்திற்கு உரித்தான இடங்கள் (வனப்பகுதி).
3. அகழ்வாராய்ச்சிப் பகுதிகள் வழிபாட்டு தலங்கள்.
4. வடிகாலமைப்புப் பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசனம் (ஆறு, அருவி, நீர் வீழ்ச்சி, குளம்)
5. நெடுஞ்சாலைகள் மற்றும் தண்டவாளங்கள்.
6. கரையோர மற்றும் துறைமுகம்.
7. இயற்கை வளங்கள் குத்துச் சாய்வுடனான காணி, ஆறு மற்றும் குளங்களின் ஒதுக்கு)
8. பொதுக் காணிகள் (கொல்லைப்புறம், விளையாட்டு மைதானம், மயானம்)

### 2. பொதுமக்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு காணிகளை பகிர்ந்தளிப்பதில் சம்பந்தப்பட்டுள்ள சட்டங்கள் எவை?

அரசாங்கத்தின் காணிகளை பொதுமக்களுக்கு அல்லது நிறுவனத்திற்கு சட்டரீதியாக வழங்குவதற்கு அதிகாரம் வழங்கும் பல சட்டங்கள் உள்ளன.

1. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (L.D.O)
2. அரசகாணி கட்டளைச் சட்டம் (C.L.O)
3. காணிச்(விசேட ஏற்பாடுகள்) சட்டம்.
4. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச்சபை சட்டம்.
5. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டம்.
6. நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டம்
7. மாகாணக் காணி நியதிச்சட்டம்.

இந்த ஒவ்வொரு சட்ட ஏற்பாடுகள், உத்தரவுகள் மற்றும் விதிமுறைகளில் அந்தந்த நிறுவனங்கள்பொதுமக்களுக்கு காணியினை வழங்குவதற்கான ஏற்பாடுகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில், சம்பந்தப்பட்ட கட்டளைச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமையவே அந்தந்த காணிகள் நிருவகிக்கப்படல் வேண்டும்.

### 2.1 அரசாங்கத்தின் சார்பில் பொதுக்காணிகளை நிருவகிக்கும் பல நிறுவனங்கள் உள்ளன. அவை பின்வருமாறு:

1. காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், மாகாணக் காணி ஆணையாளர் திணைக்களம்.
2. பிரதேச செயலகம்.
3. மகாவலி அதிகாரசபை.
4. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச்சபை.
5. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை.
6. நகர அபிவிருத்தி அதிகாரசபை.
7. வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம்
8. வனப்பாதுகாப்புத் திணைக்களம்.
9. அகழ்வாராய்ச்சித் திணைக்களம்.
10. காணிவிடுப்பு அளித்தல் திணைக்களம்.

தொடரும்...

தகவல் மூலம்- "காணிகளை அறிந்து கொள்வோம்"
Transparency International- Srilanka

# தொன்மை மிக்க வரலாற்றினைக் கொண்ட கதிர்காம முருகன் ஆலயம்

- தொடர்-

கலாபூசணம்-நவநாயகமூர்த்தி



திசமாறப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராட்சி மூலமாக ஈழத்தாழிகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. ஈழத்தில் பெருங்கற்பண்பாட்டு சின்னங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்ட இடங்கள் பற்றி கருத்துத் தெரிவித்த வரலாற்றுப் பேராசிரியர் எஸ்.பரணவிதான (Singalayo, P.9-1967) இப்பிரதேசங்கள் திராவிடரின் முன்னோர்கள் வாழ்ந்த இடங்கள்தாம் என்பதை மறுக்க முடியாதவராகக் காணப்படுகின்றார். (இலங்கை இடப்பெயர் ஆய்வு -2, பக்: 16, 17 கலாநிதி இ. பாலசுந்தரம்-1989) ஈழத்தின் பூர்வக்குடியினரான இம்மக்களையே மகாவம்சம், தீபவம்சம் போன்ற பாளிநூல்கள் இயக்கர், நாகர் என்று குறிப்பிடுகின்றன.

புவியியல் ரீதியில் தென்னிந்தியாவும் குறிப்பாகத் தமிழகமும் (சேரநாடு உள்ளிட்ட) இலங்கையும் ஒரே கலாசாரப் பிராந்தியமாக விளங்கியிருந்த அக்காலத்தில் (பெருங்கற்காலம்) திராவிடரிடையே வேல்வழிபாடு வளர்ச்சி பெற்றிருந்ததற்கு தொல்லியல் சான்றுகள் உள்ளன(பண்டைய தமிழகம் பக்:120 கலாநிதி சி.க.சிற்றம்பலம் - 1991) திருப்பரங்குன்ற மலையில் (உச்சி) பக்தர்கள் வேலினைக் கொண்டு சென்று அம்மலையில் ஊன்றி அபிசேகம் செய்வது , வழிபடுவது பண்டைய வேல்வழிபாட்டின் தொடர்ச்சியேயாகும். கதிர்காமத்தில் இன்றும் கதிரமலையில் வேல்வழிபாடு நிலவிவருகின்றது.

கதிர்காம முருகன் ஆலய வரலாற்றினை நோக்குமிடத்து கி.மு.ஐந்தாம் நூற்றாண்டளவில் பெருங்கற்கால முதிர்ச்சி நிலையில் விஜயன் அநுராத புரியைச்சூழவுள்ள இடங்களை ஆட்சிபுரிந்த காலத்தில் கதிர்காமத்தில் முருக வழிபாடும் வேல்வழிபாடும் நிலவி வந்துள்ளன என்று எண்ண இடமுண்டு. விஜயன் கலிங்கத்திலிருந்து இலங்கைக்கு வந்த பின்னர் இவ் வேளையில் இலங்கையில் புகழ்பெற்று விழுங்கியிருந்த சைவ ஆலயங்களைப் புதுப்பித்தான் இவற்றில் கதிர்காம முருகன் ஆலயமும் அடங்கும். இதனை வரலாற்றுச் செய்தியொன்று குறிப்பிடுகின்றது. (யாழ்பாண சரித்திரம் - பக்கம்:10,11 முதலியார் செ.இராசநாயகம்- 1933) இதன் வாயிலாக நாம் பெறும் உண்மை யாதெனில் ஈழத்தில் பெருங்கற் கலாசாரம் முதிர்ச்சி நிலையில் இருந்த அக்காலத்தில் (கி.மு.5ஆம் நூற்றாண்டு) இதற்கு முந்திய காலத்தில் மண்ணாலும் மரத்தாலும் கொண்டு நாகர் என்ற திராவிடக்குடியினரால் நிர்மாணிக்கப்பட்டிருந்த சிறியதொரு முருகன் (கதிர்காம) ஆலயத்தையே விஜயன் புதுப்பித்தான் என்பதாம். விஜயன் காலத்தில் நாகர் குடியினர் திராவிடம் என்ற தமிழ் மொழியைப் பேசி வந்தனர். இவர்களுடன் இணைந்து வாழ்ந்து வந்த இயக்கர் எலு என்ற கொச்சைத் தழிழைப்பேச்சு மொழியாகக் கொண்டிருந்தனர். திராவிடரான நாகர் இயக்கர் என்போரிடையே கதிர்காமத்தில் வேல்வழிபாடும் (கதிரமலை),முருக வழிபாடும் (முருகன் ஆலயம்) சிறந்திருந்தன. விஜயனதுகாலத்தில் கதிர்காமப் பிரதேசத்தில் (திஸ்ஸமாறகம) நாகஅரசு நிலைத்திருந்ததை வரலாற்றாய்வுகள் உறுதிசெய்கின்றன.

உரோகணத்தில் சிற்றரசனாகவிருந்த கவந்தீசனின் மகனான துட்டகாமினி தமிழ் மன்னனான எல்லாளனைப் போரில் வெற்றி கொண்டால் கதிர்காம முருகன் ஆலய திருப்பணி செய்வதாக வேண்டுதல் செய்தன். எல்லாளனை (கி.மு145-101) போரில் வெற்றிகண்ட பின்னர் இவ்வாலயத் திருப்பணியை துட்டகாமினி மேற்கொண்டான். இவ்வாறு “கந்த உபாத” என்ற நூல் கூறுகின்றது. கி.பி பதினோராம் நூற்றாண்டு வரையும் சிங்கள மன்னர்களால் கதிர்காம ஆலயம் பேணப்பட்டு வந்துள்ளது. இதனைத் தொடர்ந்து கதிர்காமப் பிரதேசத்தில் இருந்து சிற்றரசர் பலர் அதிகாரம் செலுத்தி வந்தனர். இவ்வேளையில் கதிர்காமத்திலிருந்து ஆட்சி செய்துவந்த லோகேஸ்வரன் என்பவனை ஐந்தாம் மகிந்தனின் பேரனாகிய முதலாம் விஜயபாகு ( கீர்த்தி ) கதிர்காம முருகனை வணங்கி வெற்றிகொண்டு கதிர்காமத்தில் அரசனானான் என்று “கந்த உபாத” நூல் மேலும் கூறும். இவ்வாறு கி.பி பதினோராம் நூற்றாண்டு வரை ஈழவரலாற்றில் கதிர்காமம் முக்கியத்துவம் பெற்றிருந்ததை ஆய்வுகள் உணர்த்துகின்றன. கி.பி பதிமூன்றாம் நூற்றாண்டில் மாகோன் என்னும் தமிழ்மன்னன் இலங்கையில் ஆட்சி புரிந்த காலத்தில் (கி.பி1215-1245 ) இவனது உபராஜனான குளக்கோட்டன் என்பவனால் கதிர்காம முருகன் ஆலய திருப்பணி செய்யப்பட்டதாக கோணேசர் ஆலய கல்வெட்டுப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

**“ சீர்பெறு மிலங்கை நகர் வாழ்வுபெறு**
**செல்வமும் சிவனேசமிகு சமயமும்**
**செப்புதற் கரிதான மாணிக்கமுறு கெங்கையும்**
**சிவமேவு கதிரமலையும். (கோணேசர்**
**கல்வெட்டுப்பாடல் வரி: 1— 4)**

மேற்குறிப்பிட்ட கல்வெட்டுப் பாடல்வரிகள் மூலமாக அக்காலத்தில் கதிர்காம முருகன் ஆலயம் கதிரமலை ஆலயம் (வேல்வழிபாடு) ஆகியன சிறப்புடன் விளங்கியிருந்தமை தெளிவு. மாகனது ஆட்சிக்காலத்தில் கதிர்காமம் உள்ளிட்ட ரோகணப்பகுதியும் மாகனது இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது. (இலங்கை வரலாறு பாகம் 1-பக் . 216 கலாநிதி செ. கிருஸ்ணராசா- 2005) தமிழ் மன்னர்களான மாகன், ஜயபாகு என்ற குளக்கோட்டன் ஆகிய மன்னர்களது ஆட்சி உருகுணையின் திஸ்ஸமாறகமை வரை பரந்திருந்ததை ராஜவலிய (டீ. புரநௌநபயசய பதிப்பு) நூலும் குறிப்பிடும்.

கி.பி பதின்மூன்றாம் , பதினாலாம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் கதிர்காமம் சிறப்புடன் விழங்கியிருந்தது. யாழ்ப்பாணத் தமிழ் அரசு உன்னத நிலையில் இருந்த அக்காலத்தில் யாழ்ப்பாண அரசனின் உதவியுடன் கி.பி பதிமூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான புகழேந்திப் புலவர் கதிர்காம முருகனைத் தரிசித்துள்ளார். நாவலர் சரிதையில் வரும் பாவொன்று இதனைக் குறிப்பிடுகின்றது. அக்காலத்திலேயே செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காம யாத்தரீகர்கள் புறப்பட்டுக் கால்நடையாக கிழக்குக் கரையூடாக வெருகல், சித்தாண்டி, திருக்கோவில், உகந்தை ஆகிய முருக தலங்களைத் தரிசித்துக் கதிர்காமத்தைச் சென்றடையும் வழக்கும் நிலவி வந்துள்ளதாக அறியமுடிகின்றது.

கி.பி பதினாலாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த அருணகிரிநாதர் கதிர்காம முருகனைத் தரிசித்து அவரது அருளினால் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட திருப்புகழ் மாலைகளையும் சாற்றியுள்ளார். அக்காலத்தில் கதிர்காமம் இந்துக்களின் புகழ்பூத்த தலமாக விளங்கியிருந்ததை அருணகிரிநாதர் இத்தலத்தின்மீது பாடிய இருபத்தைந்து பாடல்களும் எடுத்துக்காட்டுவதோடு முருகனது அறுபடைவீடுகளோடு இதுவும் அருணகிரிநாதரின் பாடல்களில் இடம்பெற்றிருப்பது நினைவுகூரற்பாலது.(“யாழ்ப்பாண இராச்சியம்” பக்: 206 பதிப்பாசிரியர் கலாநிதி சி.க சிற்றம்பலம்- 1992) எனலாம்.

# கோடை வெயிலில் உடலை பாதுகாக்கும் உணவுகள்



கோடை காலத்தின் தொடக்கமாக நாட்டில் வெயிலின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இது போன்ற காலங்களில் உடலின் வெப்பநிலையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, வேலை நிமிர்த்தமாக வெளியே செல்வோர் குளிர்ச்சியான பானங்கள் மற்றும் உணவுகளைச் சாப்பிடுவது அவசியம். அந்த வகையில் உடல் வெப்பத்தைத்தணிக்கும் 12 உணவுப் பொருட்கள் என்னென்ன என்பதைப் பார்க்கலாம்.

### தர்பூசணி:

அதிக நீர்ச்சத்து கொண்ட பழம். கோடை காலம் வந்தாலே இப்பழங்கள் அதிகளவில் விற்பனையாகும். *90* சதவீதம் தண்ணீர் சத்துக் கொண்ட இப்பழம் உடல் உஷ்ணத்தை கட்டுக்குள் வைத்திருக்கும்.

### தண்ணீர்:

உடல் வெப்பத்தை சமநிலையில் வைத்திருக்க உதவும் முக்கியமான பொருள் தண்ணீர். தினமும் *2.7* லீட்டர் முதல் *3.7* லீட்டர் வரை தண்ணீர் குடித்தால் உடல் குளிர்ச்சியாகும். வெப்பம் சார்ந்த நோய்கள் ஏற்படாதபடி தடுக்க முடியும்.

### சின்ன வெங்காயம்:

பெரும்பாலான நோய்களைக் கட்டுப்படுத்தும் மருத்துவ குணம் இதற்கு உண்டு. சின்ன வெங்காயம் உடலை குளிர்ச்சியடைய செய்வது மட்டுமன்றிஇ வெயிலில் இருந்தும் பாதுகாக்கும். இதனை உணவில் அதிகளவில் சேர்க்கும் போது வெப்பம் சார்ந்த நோய்கள் குணமடையும்.

### வெள்ளரி:

தர்பூசணியை போல வெள்ளரிக்காயும் அதிக நீர்ச்சத்து கொண்டது. இதில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. வெப்பத்தால் ஏற்படும் மலச்சிக்கலை போக்க உதவும்.

### தயிர் :

பாலில் இருந்து தயாரிக்கப்படும் தயிர், கோடைக்காலத்தில் பயன்படுத்தக்கூடிய முக்கிய உணவுப் பொருள். பொதுவாக புரதச்சத்து அதிகம் கொண்ட கோழி இறைச்சி உடல் வெப்பத்தை அதிகரிக்கும். ஆனால் அதே புரதச்சத்து நிறைந்த தயிர் உடல் வெப்பநிலையைக் குறைக்கும்.

### இளநீர்:

கோடை காலங்களில் தண்ணீர் குடித்து சலிப்பு ஏற்பட்டால் இளநீர் பருகலாம். இதிலிருக்கும் விட்டமின் மற்றும் மினரல்கள் வெப்ப நோய்கள் வராமல் பாதுகாக்கும்.

### புதினா :

புதினா இலை உடலை குளிர்ச்சியாக மாற்றுவது மட்டுமன்றி புத்துணர்ச்சியைத்தரும். நாம் அருந்தும் பழச்சாறு, பானங்களுடன் இதையும் சேர்த்துச் சாப்பிடலாம்.

### கற்றாழை :

கல்சியம்இ குளோரின், சோடியம் உள்ளிட்ட சத்துக்கள் நிறைந்த கற்றாழை அதிக நீர்ச்சத்து கொண்டது. கற்றாழை சாறை தொடர்ந்து பருகி வந்தால் உடல் வெப்பம் தணியும். வெப்பத்தால் ஏற்படும் சரும பாதிப்புக்களை நீக்கவும் இது உதவுகிறது.

### பச்சைக் காய்கறிகள்:

தண்ணீர் சத்து நிறைந்த காய்கறிகளைச் சாப்பிடுவதும் உடலுக்கு ஆரோக்கியத்தைத் தரும். கோடை காலங்களில் கீரை, புரோக்கோலி, காலி /பிளவர் ஆகியவற்றை உணவுடன் அதிகளவில் சேர்த்துச் சாப்பிடலாம்.

ந.சசிகரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
நாவிதன்வெளி

# கரட் அல்வா

## தேவையான பொருட்கள்



1. கரட் – 1 கிலோ கிராம்
2. பால் – 2 லீற்றர்
3. சீனி – 2 கிலோ கிராம்
4. மாஜரின் – 100 கிராம்

**செய்முறை:**

கரட்டை நன்றாகச் சுத்தம் செய்து, துருவிக் கொள்ள வேண்டும். அதனை ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பில் வைக்கவும். நன்றாக வதங்கிய பின்னர், அதனுடன் பாலைச் சேர்த்து கிளற வேண்டும்.இரண்டும் ஓரளவு திரண்டு வரும் போது சீனியை சிறிது சிறிதாகச் சேர்த்து கிளற வேண்டும்.பாத்திரத்தில் ஒட்டாதவாறு பதம் வரும் வரை வதக்கிய பின் சிறிது மாஜரினைத் தடவி அல்வாவைக் கொட்டி பரவி விடவேண்டும். பின் தேவையான வடிவத்தில் வெட்டி, ஆறியதும் பரிமாறலாம்.

G.கிருஷ்ணவேணி
அபிவிருத்தி உத்தியோகத்தர்.

# பகோடா

## தேவையான பொருட்கள்



1. கடலை மா – 100கிராம்
2. அரிசி மா – 50 கிராம்
3. பச்சை மிளகாய் – 2
4. இஞ்சி – 1துண்டு
5. சி.சீரகம் – தேக்கரண்டி
6. பூண்டு – 5
67. பரிய வெங்காயம் – 1
8. கறிவேப்பிலை சிறியளவு
9. தேவையான அளவு உப்பு
10. பட்டர் – 1துண்டு
11. பொரித்தெடுக்க தேவையான எண்ணெய்

**செய்முறை:**

கடலை மா, அரிசி மா இரண்டையும் ஒரு பாத்திரத்திலிட்டு பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய், இஞ்சி. சீரகம் சேர்த்து கொள்ளவும். அது கூடவே இடித்த பூண்டு, வெங்காயம், கறிவேப்பிலையையும் சேர்த்து கொள்ளவும். பின்னர் பட்டர் சேர்த்து சிறிதளவு நீர்விட்டு பிசைந்து கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி அடுப்பில் வைக்கவும். ஏண்ணெய் சூடானதும் பிசைந்த மாவை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து எண்ணெயில் போடவும். நன்றாக சிவந்து பொரிந்தவுடன் வெளியே எடுத்து பரிமாறலாம்.

R.ரூபிகா
அபிவிருத்தி உத்தியோகத்தர்.

## தலைமுடி நீளமாகவும் அடர்த்தியாகவும் வளர்வதற்கு.

### தேவையான பொருட்கள்

1. வெந்தயம் 1 கைப்பிடி
2. கறிவேப்பிலை 1 கைப்பிடி
3. செம்பரத்தி இலை 3
4. செம்பரத்தி பூ 3



**செய்முறை:**

1 கைப்பிடியளவு வெந்தயத்தை நீரில் ஊறவைத்து ஊறவைத்த நீரை வடிகட்டி வெந்தயத்தை தனியாக எடுத்து அதனுடன் கறிவேப்பிலை செம்பரத்தி இலை, செம்பரத்தி பூ என்பவற்றை சேர்த்து மிக்சியில் அரைத்து ஒரு பாத்திரத்தில் எடுத்து வைக்கவும். பின்னர் அதிலிருந்து தேவைக்கேற்ப எடுத்து அதில் முட்டை வெள்ளைக்கருவை மாத்திரம் சேர்த்து நன்றாக கலக்கிய பின்னர் அதனை எடுத்து தலைமுடியின் வேர்ப்பகுதியில் படும் படியாக தேய்த்து 10 – 15 நிமிடங்கள் கழித்து குளித்தல் வேண்டும். இவ்வாறாக வாரத்திற்கு இரு முறைகள் தலைக்கு தேய்த்து குளித்து வந்தால் தலைமுடி நீளமாகவும் அடர்த்தியாகவும் வளரும்.இதனை குளிர்சாதனப்பெட்டியில் சேமித்து வைத்து தேவைப்படும்போதும் பயன்படுத்தலாம்.

R.ரூபிகா
அபிவிருத்தி உத்தியோகத்தர்.

# பொருளாதார நெருக்கடியும் அதன் தாக்கங்களும்

பொருளாதார நெருக்கடி காரணமாக சமூகத்தில் பல்வேறு தாக்கங்கள் ஏற்படுகின்றன. ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் ரீதியான அபிவிருத்தி ஆகும். ஆணும் பெண்ணும் சமத்துவ சிந்தனையுடன் செயற்படும் போதும் அபிவிருத்தி ஏற்படும். "ஆணும் பெண்ணும் சரி நிகர்" என கொள்வதால் இவ்வையகம் தழைக்கும் எனும் பாரதியார் வாசகத்தை நினைவு படுத்த விரும்புகின்றேன். அதிக அந்நிய செலாவணியை ஈட்டி தரும் துறைகளாக தோட்டத் தொழில், ஆடை தொழிற்சாலை, வெளிநாடுகளுக்கு பணிப்பெண்ணாக செல்வதன் மூலம், சுற்றுலாத்துறை போன்றன முக்கிய துறைகளாக காணப்படுகின்றன. இந்த துறைகளில் அதிக பங்களிப்பு செய்பவர்கள் பெண்கள். எனவே பால்நிலை சமத்துவம் பேணப்பட்டு அபிவிருத்தியை நோக்கி நகர வேண்டும். ஆனால் இங்கு பால்நிலை சமத்துவம் பேணப்படுகின்றதா? என கேட்டால் இல்லை என்பது வெளிப்படை உண்மை. ஆணாதிக்க சிந்தனை காரணமாக சம வாய்ப்பு, சம சம்பளம், சமவளங்கள் ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெண்களை எமது சமூகம் பார்க்கும் பார்வைக்கோணம் தவறானது ஆகும். அவர்களை விமர்சிக்கும் போது அவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். வீட்டுப் பிரச்சினையின் பாரம் கடைசியில் பெண்களின் கரங்களை வந்தடையும்.

பொருளாதாரம் என்ற சொல்லிலும் இந்த தாரம் இருக்கின்றது. எனவே பெண்களை அபிவிருத்தி துறையில் இணைப்பதன் மூலம் நாட்டின் சுமையை குறைக்க முடியும். பெண்களுக்கு முச்சுமைகள் காணப்படுகிறன. பால்நிலை சமத்துவம் பேணப்பட்டால் ஆண்கள் பெண்களது வீட்டு வேலை, பிள்ளை வளர்ப்பு, சமூக செயற்பாடுகள் போன்றவற்றில் உதவி செய்வதால் பெண்களும் உற்பத்தி துறைகளில் ஈடுபட்டு வீட்டுக்கு நாட்டுக்கும் பொருளாதார ரீதியான பங்களிப்பை வழங்க முடியும்.

எந்த பிரச்சினையாக இருந்தாலும் அதன் தீர்வு இறுதியில் பணம் எனும் அளவுக்கு காலம் சென்று கொண்டுள்ளது. பொருளாதார பிரச்சினை எனும் போது அதன் தாக்கங்களாக அல்லது அதன் விளைவுகளாக பாடசாலை இடை விலகல், தற்கொலை, மன நோயாளிகள், போதைப்பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகங்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், விலைவாசி ஏற்றம் மின்கட்டணம் உயர்வு, விவாகரத்து, தாபரிப்பு வழக்கு, கொலை வறுமை, வீட்டு வன்முறை என பல்வேறு தாக்கங்கள் இடம்பெறுகின்றன இதற்கான காரணம் என்ன என்று பார்க்கும் போது பொருளாதார வீழ்ச்சி ஆகும். பொருளாதார வீழ்ச்சிக்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. அந்த காரணங்களை அடையாளம் கண்டு அவற்றை சரி செய்யும் போது பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நகர முடியும்.




மஞ்சளின் விலை ஒரு காலத்தில் அதிகமாக இருந்தது. உள்நாட்டு உற்பத்திகள் அதிகரிக்கும் போது அதன் விலைவாசியும் குறைவடையும். பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக மக்கள் வரிசையில் நின்றனர். விவசாயத்திற்கு தேவையான உரம் தட்டுப்பாடு ஏற்பட்டது. அத்தோடு விலைவாசி அதிகமாக இருந்தது. இதனால் மக்கள் மத்தியில் ஒரு பயம் ஏற்பட தொடங்கியது. இதனால் வீடு வளவுகளை விற்றுவிட்டு வெளிநாடு செல்ல ஆரம்பித்தனர். வங்கியில் பணம் வைக்க பயம். பயந்த நிலையில் பணத்தை கொடுத்து நகைகள் வாங்குவதும் வீடு வளவு காணிகளை வாங்குவதும் என மூலதனம் முடக்கப்படுகின்றது. "பணம் பாதாளம் வரை பாயும்", "பணமில்லாவிட்டால் பிணம்"என்பார்கள்.

நிதிப்பற்றாக்குறைகளால் விழிப்புணர்வு நிகழ்வுகளும் குறைவடைந்துள்ளதால் பல்வேறு சமூகத் தாக்கங்கள் அதிகரிக்கும். அதனால் மனநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றன. எனவே ஒவ்வொருவரும் தொழில் முயற்சியாளர்களாக மாற வேண்டும் பண்டமாற்று முறைகளை கொண்டு வரமுடியும். தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்த வேண்டும். பெண்களின் முன்னேற்றம் உலக நலனுக்கு முக்கியமானது. ஓர் இறக்கை உடைய பறவையால் பறந்து சாதிக்க முடியாது என்று பெண்ணினத்தின் முக்கியத்துவத்தை அழகாக சுவாமி விவேகானந்தர் கூறினார். பெண்களுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டு செயற்பாடுகள் இடம் பெறும்போது அபிவிருத்தி என்பது சந்தேகம் இல்லை.வெளிநாட்டு கடன் டொலர் பற்றாக்குறை, பொருட்களின் ஏற்றுமதி செய்ய முடியாத நிலை, பொருட்களின் விலை அதிகரிப்பு, பண வீக்கம் போன்றன ஏற்பட்டன. அதனால் முரண்பாடு, போட்டித் தன்மை, சண்டை, கொலை, களவு, ஏமாற்றம், தற்கொலை, உள நோய்கள் என பல தாக்கங்கள் இடம்பெறுகின்றன. இதனை குறைக்க வேண்டுமாயின் மாற்று வழிகளை கண்டுபிடிக்க வேண்டும். உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும். உளநல ஆலோசனைகளை அதிகரிக்க வேண்டும். பல குடும்பங்களின் வருமானம் பாரியளவில் வீழ்ச்சி அடைந்தமை மக்களை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் சென்றுள்ளது. 2020 மார்ச் ஏற்பட்ட இறக்குமதி தடைகள், உலகளாவிய ரீதியிலான பொருட்களின் விலை உயர்வு ஆகியவை பணவீக்க அழுத்தத்துக்கு பங்களிப்பு செய்துள்ளன. வேலையின்மை மனச்சோர்வு, நாட்டின் வாழ்க்கை தரத்தின் கூர்மையான வீழ்ச்சி போன்ற எதிர்மறை நிகழ்வுகள் பொருளாதார நெருக்கடி என்ற கருத்துடன் தொடர்புடையவை. பொருளாதார சூழ்நிலையில் ஏற்பட்ட கடுமையான மாற்றங்களால் அதனால் உலக ரீதியான பாதிப்புகளுக்கும் வழிவகுக்கின்றன. சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள், வலு இழப்புடன் கூடிய நபர்கள் அதிகமாக பாதிக்கப்படும் நிலைமை ஏற்படும். உணவு தட்டுப்பாடு, மருந்து தட்டுப்பாடு ஆரோக்கியமற்ற சமூகத்தை உருவாக்கும்.

சர்வதேச செஞ்சிலுவைச்சங்க குழு அறிக்கை இலங்கையில் 5 மில்லியன் மக்கள் மனிதாபிமான உதவி தேவைப் படுபர்கள் என்கின்றது. மொத்த சனத்தொகையில் 26 வீதம் உணவு பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். 5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் போசாக்கு குறைவடைந்துள்ளனர். தற்போதைய பொருளாதார நெருக்டியால் நாட்டின் மொத்த சனத் தொகையில் 11 வீதமானவர்கள் வருமானத்தை இழந்துள்ளனர். குடும்பத்தின் வருமானம் மட்டும் 62% ஆல் குறைவடைந்துள்ளது.

முன்பக்க தொடர்ச்சி...

நெருக்கடியானது குடும்பங்களை வறுமைக்கு தள்ளியுள்ளது. தொற்று நோய் காரணமாக இந்த நாட்டில் உள்ள அரை மில்லியன் மக்கள் வறுமைக்கோட்டுக்கு கீழ் தள்ளப்பட்டுள்ளதாக உலக வங்கி மதிப்பீடு செய்துவிட்டது. 86 வீதமான குடும்பங்கள் விலை குறைவான மற்றும் போசாக்கு இல்லாத உணவு வகைகளை கொள்வனவு செய்வதாக உலகம் உணவு திட்டத்தின் தரவுகள் குறிப்பிடுகின்றன. சில சந்தர்ப்பங்களில் உணவு வேளைகளை முழுமையாக தவிர்க்கும் குடும்பங்களும் இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடி மற்றும் தொற்றுநோய் பரவலுக்கு முன்னர் இலங்கை முழுவதும் போசாக்கின்மை விகிதாசாரம் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. இந்த நிலையில் தற்போது காணப்படுகின்ற பொருளாதார நிலைக்கு மத்தியில் அது மேலும் வலுவடைந்துள்ளது.

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்று கொண்டதன் பின்னர் பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியன எமக்கு உதவிகளை வழங்கும் போது மனித உரிமை நிலைமை குறித்து அவதானம் செலுத்த வாய்புள்ளதாக கருத்துக்கள் நிலவுகின்றன.

இலங்கையில் உள்ள 15 வயதிற்கு மேற்பட்ட பெண்களில் 214,298 பேர் தொழிலற்றவர்களாக இருக்கின்றனர். பொருளாதார நெருக்கடியின் காரணமாக குடும்ப வன்முறைகள் அதிகரிக்கின்றன. 2005 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க குடும்ப வன்முறை தடுப்பு சட்டம் மூலம் இதற்க்கு நிவாரணம் பெற முடியும்.

எதிர்மறை எண்ணங்களை தவிர்த்து பெண்தலைமைத்துவ குடும்ப பெண்களை பெண்தொழில் முயற்சியாளர்களாக மாற்ற வேண்டும். அவர்களது பிரச்சினைகளை கேட்பதன் மூலம் தீர்வுகளுக்கான வழிகாட்டல்களை வழங்க வேண்டும்.

எனவே பொருளாதார நெருக்கடிகளை குறைத்து சம உரிமையுடனும் சமூக, பொருளாதார, அரசியல், சூழல் மற்றும் பால்நிலை சமத்துவத்தை கொண்ட சமூகத்தை உருவாக்க வேண்டும். பெண்கள் விழிப்புணர்வு பெற்று அணிதிரண்டு வலுப்பெறுவதுடன் வலையமைப்புக்களை கட்டி அமைத்து தமது பால்நிலை சமத்துவத்துடனான உரிமைகளை பெறுவதனூடாக சமூக, பொருளாதார, அரசியல் சூழலை சகலரும் அனுபவித்தலை உறுதி செய்தல் வேண்டும்.

ஜெனிதா மோகன்
மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
கல்முனை

## பாரதியார் கவிதை

மனதில் உறுதி வேண்டும்,
வாக்கினிலே இனிமை வேண்டும்:
நினைவு நல்லது வேண்டும்,
நெருங்கின பொருள் கைபட வேண்டும்,
கனவு மெய்ப்பட வேண்டும்:
கைவசமாவது விரைவில் வேண்டும்,
தரணியிலே பெருமை வேண்டும்:

கண் திறந்திட வேண்டும்,
காரியத்தில் உறுதி வேண்டும்:
பெண் விடுதலை வேண்டும்,
பெரிய கடவுள் காக்க வேண்டும்:
மண் பயனுற வேண்டும்,
வானகமிங்கு தென்பட வேண்டும்:
உண்மை நின்றிட வேண்டும்!

## புதிதாய் பிறந்திடுவர்



மாதர் தம்மை
இழிவு செய்யும்
மடமையைக்
கொழுத்துவோம்
என்ற பாரதி
இங்கில்லை,
இருந்திருந்தால்!
என்னவாகும்
இப் பூமி,
சுட்டெரித்திருக்காதா
பாரதியின்
அக்கினிப்பார்வை.
மாதர்களே!
இவர்கள் என்ன
மா மனிதம்
படைத்தவர்களா?
மாதரைக்
கௌரவிக்க?
உலகப் புகழ்
வேண்டுமாம்.
சிலருக்கு,
வேண்டுவன
வேண்டுமெனின்,
நாட்டிலுள்ள
சாதாரண
பெண்களையெல்லாம்
சாதனைப்
பெண்களாய்
மாற்றிப் பாருங்கள்,
ஈரேழுலகின்
மாதர்களும்
அன்றே
புதிதாய்ப்
பிறந்திடுவர்.
அன்று ஈராயிரம்மென்ன?
ஈரேழுலகின்
மாதர்களும்
அன்றே புதிதாய்
பிறந்திடுவர்.
புறம்பட்டு பிறந்திட
மாதரே கேளீர்!
நிமிர்ந்த நன்நடையும்
நேர்கொண்ட பார்வை
யாருக்கும் அஞ்சா
நெறியோடு,
நிமிர்ந்த ஞானம்
கொண்ட பெண்ணினம்
நீ எனில்,
செம்மை மாதராய்
வாழ்ந்திடு என்றும்...

-R.சுவர்க்கா

## காய்கறியும் பெண்மையும்



கர்ப்பப்பையை கர்ப்பக்கிரஹமாக்கிட – தேங்காய்
வலியில்லாத மாதவிடாய்க்கு வழிகாட்டிட – கொத்தவரை
மலடை மலடாக்கி பெண்ணை தாயாக்கிட – கத்தரிக்காய்
முடிவில்லா போக்கை வண்மையாக மறுக்கும் – வெண்பூசணி
தாமதமாகும் போக்கை முறித்துவிட துடிக்கும் – முருங்கைக்காய்
அதிக இரத்தப்போக்கிற்கு நிவாரணம் – வாழைக்காய்
அதிக வெள்ளைபோக்கிற்கு பரிகாரம் – கோவைக்காய்
தடையில்லாமல் தாய்ப்பால் சுரந்திட – புடலங்காய்
தடைபட்ட மாதவிடாய் உடைத்தெறிந்திட – எலுமிச்சை
கட்டியான உதிரப்போக்கை தட்டிகேட்டிட – வெண்டைக்காய்
சுகமான பிரசவத்தை நிகழ்த்திக்காட்டிட – அரசாணிக்காய்

**பெண்மைக்கு வாழ்வு தரும் நாட்டுக்காய்கறிகளை பெண்களே விரும்பாமல், உண்ணாமல் மறுப்பதேன் ?**

திருமதி .D.ஜாசுகி

## சுதந்திரக் காற்று வீசட்டும்

தேசத்தின் வழிவாழ வாழ்த்திட்டோம் உண்மை
பாசத்தின் வழி நாமும் கூடுதல் நன்மை
நேர்மையின் வழியிலே செலுத்திடுவோம் வாழ்வை – நம்
நெஞ்சத்தில் புகுத்திடுவோம் புது மனித வாழ்வை

ஆயிரம் அண்டுகள் வாழ்ந்தவனும் இல்லை – பல
ஆயிரம் புதுமைகள் கண்டவர்கள் கொள்ளை
வம்புகள் தும்புகள் வார்த்தைகளில் வேண்டாம் – நாம்
வாழ்க்கையில் அர்த்தத்தை ஒழித்துவிட வேண்டாம்

சேவையில் நலம் பெற்று செம்மையுற வேண்டும் – எம்
தேவையில் சுயநலன் மறைந்துவிடக் கூடும்
ஆயுளில் வாழ்வதை அர்த்தமுடன் வாழ – நாம்
அன்புடன் வார்த்தையை சொல்லிவிடக் கூடும்

அன்பான பிரதேசம் அகிலமதில் உண்டு– அதை
கண்கொண்டு பார்த்ததாலே முழுமனதில் நன்று
பிரதேச செயலாளர் வழிகாட்ட உண்டு – அதை
பின்பற்றி செயற்பட்டால் நலனுண்டு என்றும்

தாய் சொல்லைத் தட்டாதே மூத்தோரின் வழக்கு – வெறும்
வாய்ச்சொல்லால் விடியாது எப்போதும் கிழக்கு
வாழ்ந்தாலும் தடங்கொண்டு வாழ்வோமே என்றும் – நாம்
மாய்ந்தாலும் பெயரன்றும் நிலைநின்று வெல்லும்

சேவைகளில் புதுமைகளை செயற்படுத்தி நிற்போம்– புது
வேலைகளால் அகிலமதை புதுப்பொலிவு செய்வோம்
பாதைகளில் பலவிதைகள் கிடப்பதும் உண்டு– அதில்
பக்குவமாய் உள்ளதுவே விருட்சமாகும் நின்று

வாசிப்போம் வாழ்வது புத்தகத்தை மெல்ல
வாழ்க்கையின் காலங்கள் நகர்வது சொல்ல
நேசிப்போம் சுபீட்சத்தின் சுதந்திர ஊற்றை
சுவாசிப்போம் தேசத்தின் சுதந்திரக் காற்றை

அருளானந்தம் சுதர்சன்



பறவையின் பயணம்
பறக்கும் தூரம்
பறந்து செல்லும்
நளினம் கொஞ்சம்
பறவையின் மொழியே
கதைகள் கூறும்

வானில் அலையும்
சத்தம் ஒலிக்கும்
இறக்கை விரிக்கும்
பறவையின் பயணம்
இயற்கையின் மீதான
ஆர்வங்கள் அதிகமானது

விடியலின் காட்சிகள்
தடங்கல்கள் தாண்டும்
தடயங்கள் அற்ற சாட்சி
விடிந்த பொழுதிலும்
எழுந்து பறப்பேன்

உலகம்தான் வாழ்க்கை
இறக்கைகள் இயந்திரம்
மரங்களை வெட்டாதீர்!
இனங்களை அழிக்காதே!

யோகராசா கவிதா
கவிநிலா
அன்னமலை

### அம்மா

**எத்தனை பிள்ளைகளைப் பெற்று வளர்த்தாலும் பிள்ளைகளால் வளர்க்கப்பட முடியாதவள் அம்மா.**

### அப்பா

**பாசத்தை வெளிக்காட்ட பள்ளிக்கூடம் போகாத உறவு அப்பா.**

### நட்பு

**உறவுகள் வெறுத்தாலும் உள்ளத்தை தாங்கும் உன்னத உறவு நட்பு.**

### விடியல்


**பூமியதன் மணல் விரிப்பில் அழகுத் தேமல் விடியல்.**

### குளித்தல்

**காய்ந்த உடையை நனைப்பதற்கான முயற்சி குளித்தல்.**

**- R. சுவர்க்கா.**

## வண்ணத்துப் பூச்சி



ஆகாயப் பூக்களாய் வானில்
வட்டமிடும்
வர்ணஜாலம் கண்டேன்.
இறக்கையெங்கும் இறைவன்
வரைந்த ஓவியம்
ஒன்று வண்ணப் பூவில் மிளிர
கண்டேன்.
வானவில்லின் ஏழு நிறங்களும்
வாசல் வந்து
நடமாடும் விந்தை கண்டேன்.
ஆண்டாண்டு வாழும் மானிடரின்
அவ நம்பிக்கை கண்டேன்.
அத்தனைக்கும் எட்டு நாள் வாழும்
வண்ணப்பூச்சியின் நம்பிக்கை கண்டேன்.
வண்ணப் பூச்சியே பாரினில் மானிடரெல்லாம்
உனைக்கண்டு வாழ நானும் அவா கொண்டேன்.

-விவிதா

# அலோபதி மருந்துடன் (ஆங்கில) ஆயர்வேத மருந்து உட்கொள்ளலாமா மருத்துவர் சொல்வது என்ன?

ஆயர்வேதம் ஆயுளைக் காக்கும், வளர்க்கும் என்ற செய்தி தொடர்ச்சியாக சோசியல் மீடியாக்களில் பரப்பப்படுகின்றன. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஆயர்வேத மருத்துவத்தைப்பற்றி அறியவும் அதில் சிகிச்சை எடுக்கவும் பலரும் ஆர்வமாக இருக்கின்றனர். அதே நேரத்தில் ஆயர்வேதம் குறித்து பல தவறான புரிதலும் அதிகரித்துள்ளது. குறிப்பாக ஆயர்வேத மருந்துகள் உட்கொண்டால் பக்க விளைவுகள் ஏற்படாது, ஆயர்வேத மருந்துகளில் உலோகங்கள் கலக்கப்படுகின்றன, ஆயர்வேத மருந்து சாப்பிட்டால் உடல் சூடாகும் என்பது போன்ற பட்டியல்கள் நீள்கின்றன.

இவ் விடயம் குறித்து ஆயர்வேத மருத்துவர் (இந்திய) சாந்தி விஜயபால் அவர்களின் கருத்தானது ஆங்கில மருத்துவத்தில் அண்டியயட்டிக் மருந்து எடுத்துக்கொண்டால் அது அசிடிட்டியை ஏற்படுத்தலாம். எனவே அண்டியயட்டிக் மருந்து கொடுக்கும்போதே இரைப்பையில் அழற்சி மற்றும் புண் ஏற்படாமல் இருக்க பேன்டபிரசோல் (PANTAPRAZOLE) மாத்திரையும் சேர்த்துக் கொடுப்பார்கள்.

ஆனால் ஆயர்வேத மருந்து எடுத்துக்கொண்டால் அது இன்னுமோர் பிரச்சினையை ஏற்படுத்தாது. பொதுவாக (உநசடியட முசபைஎ) கெர்பல் ஓர்ஜின் என்பதால் அதில் பக்க விளைவுகள் இருக்காது ஆனால் சில நேரங்களில் பக்க விளைவுகள் ஏற்படலாம். அதாவது அவர்வர் உடல் நிலையறிந்து கொடுக்காமல் விட்டாலோ டோஸ் அதிகமாகக் கொடுத்தாலோ பக்க விளைவு ஏற்படலாம். ஆங்கில மருந்துகளுடன் சேர்த்துச் சாப்பிட்டாலும் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது.

கை ரேகைகள் வேறுபடுவது போல் ஒவ்வொருவரது உடலின் தன்மையும் வேறுபடும். பித்தம் மற்றும் கப உடல்வாகு இருப்பவர்களுக்கு அரிப்பு வரலாம். அவர்கள் இருவருக்கும் ஒரே மாதிரியான மருந்துகள் கொடுத்தால் அது பயன் தராது. அத்தகைய சூழலில் பித்த உடல்வாகு இருப்பவர்களுக்கு பித்தத்தைக் குறைக்கும் மருந்துகளைக் கொடுத்தால் மட்டுமே அவர்களுக்கு அரிப்பு குறையும். மாற்றிக் கொடுத்தால் பிரச்சினை குறையாததுடன் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. எனவே ஆயர்வேத மருந்தாக இருந்தாலும் அதை சரியான முறையில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆயர்வேத மருத்துவத்தில் வலி நிவாரணி மாத்திரைகள் கிடையாது அதற்குப்பதிலாக தசைகளை தளர்வாக்க (Muscles relaxant) குக்குலு (Guggulu) மாத்திரைகள் கொடுக்கப்படும் ஆனால் அந்த மாத்திரைகள் கொடுக்கும்போது அளவு அதிகமாக இருந்தால் பக்கவிளைவுகள் ஏற்படலாம். மூட்டு வலிக்குக் கொடுக்கப்படும் ராஸ்னா ஏரண்ட் கசாயத்தில் ஆமணக்கு அதிகமாக எடுத்துக்கொள்ளும் போது பேதி உண்டாகும். அளவு சரியாகக் கொடுக்கப்படாததே அதற்குக் காரணமாகும். நோய் குணமாக வேண்டும் என்பதற்காக மருந்துகள் சாப்பிடும்போது சில நேரங்களில் மருந்துகள் ஒவ்வாமையால் பக்கவிளைவுகள் ஏற்படலாம். இது பலருக்குத் தெரிவதில்லை. பொதுவாக 50 வயதைக் கடந்தாலே உடல் சார்ந்த பிரச்சினைகள் வரத் தொடங்கிவிடும். இதயம் சார்ந்த பிரச்சினைகளால் பலர் அவதிப்படுவார்கள். அவர்கள் ஏதாவது ஓர் அலோபதி மருந்தை எடுத்துக் கொண்டிருப்பார்கள்.

குறிப்பாக இரத்தத்தை உறைய விடாமல் தடுக்கும் மருந்துகளைச் சாப்பிடும்போது அதற்கு எதிரான மருந்துகளைச் சாப்பிடாமல் இருப்பது நல்லது. உதாரணமாக அருகம்புல் ஜூஸ் குடிப்பவர்கள் கவனத்திற்கு, அருகம்புல்லுக்கு இரத்தத்தை உறைய வைக்கும் குணமுண்டு ஏற்கனவே அவர்கள் இதயநோய்க்காக சாப்பிடும் அலோபதி மருந்துடன் அருகம்புல் சேரும்போது வேதியியல் மாற்றமடைந்து அவர்களுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். சில நேரங்களில் உயிருக்கு ஆபத்தையும் ஏற்படுத்தலாம் எனவே மாத்திரை மருந்துகள் சாப்பிடுபவர்கள் எச்சரிக்கையுடன் இருத்தல் நன்று.

அடுத்து இரத்தம் உறைவதைத் தடுக்கக் கூடியது இஞ்சியாகும். இஞ்சி டீ, இஞ்சி துவையல் சாப்பிடுபவர்கள் இதய நோய்க்காக எடுத்துக்கொள்ளும் அலோபதி மருந்துகளுடன் சேரும்போது பிரச்சினைகளை உருவாக்கலாம், பக்கவிளைவுகள் ஏற்படலாம். இதனைத் தடுப்பதாயின் இவைகள் பற்றி ஆயர்வேத மருத்துவரிடம் ஆலோசனை பெற்ற பின்னரே மருந்துகளை உட்கொள்ளுதல் அவசியமாகும்.

நன்றி (விகடன்)

கி.யோகலிங்கம்

## ஆங்கில மருத்துவத்தின் தோற்றம்

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

மருத்துவம் (MEDICINE) என்ற சொல் இ இலத்தின் மொழியில் உள்ள ஆர்ஸ்மெடிசினா (ARSMEDICINA) என்ற வார்த்தையிலிருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருள் “குணப்படுத்தும் கலை” என்பதாகும். மருத்துவத்தைப் பற்றிய தொடக்க காலக் குறிப்புக்கள் பின்வரும் ஐந்து வகை ஆதாரங்களிலிருந்து எமக்குக் கிடைக்கின்றன.

1. இந்தியாவின் சித்த மருத்துவம், ஆயுர்வேதம்.
2. எகிப்தின் பாப்ரஸ்.
3. புழமை வாய்ந்த சீன மருத்துவக் கலை.
4. செவ்விந்திய மாயா மருத்துவக் கலை.
5. கிரேக்க மருத்துவக் கலை.

இதனடிப்படையில் கிரேக்க மருத்துவம் என்பது நவீன மருத்துவம் , அலோபதி மருத்துவம் என ஆங்கில மருத்துவமாக தற்போது வழக்கில் உளள்ளது. கிரேக்க மருத்துவ அறிஞரான ஹிபோகிரட்டிஸ் அவர்களுடைய மருத்துவக் குறிப்புக்களே இவற்றுள் சிறந்ததாகவும் ஓரளவிற்கு அறிவியல் சார்ந்ததாகவும் காணக்கிடைக்கின்றது. எனவே இவரே ஆங்கில மருத்துவத்தின் தந்தை என்று அழைக்கப்படுகின்றார். இதற்கான முக்கிய காரணம் மருத்துவத்தை ஓரளவிற்கு மதத்திலிருந்து பிரித்து ஒரு தனிக்கலையாக வளர்த்தார். அதற்கு ஓர் அறிவுடன் கூடிய நடைமுறையையும் ஏற்படுத்தினார். நோயாளிகளைப் பரிசோதிப்பதன் மூலமாகவும் அவர்களது நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிப்பதன் மூலமாகவும் நோய்களைப் பற்றி அறிந்து கொள்ளலாம் என்பதை முதன்முதலில் கூறினார். நோய்க்கான காரணத்தை மனிதனுடைய உடலிலிருந்து அல்லது அவனது சூழலிலிருந்து அறிந்து கொள்ள இயலும் என்பதை முதன்முதளில் தெளிவுபடுத்தியவர் இவரே.

தொடரும்...

# மூத்த கலைஞர் கலாபூசணம் ஜீ.அன்ரனியுடன் ஒரு சந்திப்பு

(ஏ.எல்.எம்.சினாஸ்; என்.நீலேந்திரன்)



1945ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ஆம் திகதி யாழ்ப்பாணம் குருநகர் பிரதேசத்தில் பிறந்த ஜி.அன்ரனி அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை குருநாகர் சென்.ஜோன்ஸ் அரசபாடசாலையில்பெற்று கொண்டார். பின்னர் யாழ்ப்பாணம் புனித பத்திலீசியார் கல்லூரியில் கல்வி பயின்ற திரு. அன்ரனி அவர்கள்இ 1973இல் ஆங்கில ஆசிரியராக பரந்தன் – கண்தாவளையில் தனது முதல் நியமனத்தை பெற்றுக்கொண்டார். 78 –79 காலப்பகுதியில் பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் ஆங்கில விசேட பயிற்சியை பெற்றுக்கொண்ட இவர் 1980 இல் கல்முனை நாவிதன்வெளி பிரதேசத்தில் உள்ள ரோமன் கத்தோலிக பாடசாலைக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டார். தற்போது சொறிக்கல்முனை கொலிக்குறோஸ் மகாவித்தியாலயம் என பெயர் பெற்றுள்ள இப்பாடசாலையில் மிக நீண்ட காலமாக ஆங்கில ஆசிரியராக பணியாற்றினார். பல கல்விமான்கள் உருவாவதற்கு முன்நின்று ஆங்கிலக் கல்வியை போதித்தார். மிகச் சிறந்த மேடை நாடக கலைஞராக இருந்து நாடகத்துறையில் மாணவர்களை பயிற்றுவித்தார். 2013 ஆம் ஆண்டு சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தில் ஆங்கில ஆசிரிய ஆலோசகராக நியமிக்கப்பட்டார். 2018ல் கல்வி சேவையில் இருந்து ஓய்வு பெற்றபோதிலும் இறுதிவரை தனது கல்வி சேவையை வழங்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தோடு தற்போது நிந்தவூர் லெஸ்தகீர் ஆங்கில கல்லூரியில் சிறந்த ஆங்கில ஆசிரியராக பணியாற்றி வருகின்றார்.

கலைத்துறையில் இவரது ஈடுபாடு அபரிதமானது. நாவெளி மின்னிதழுக்காக படலையை தேடி சென்ற போது திரு.ஜி. அன்ரனி அவர்களை சந்திக்க கிடைத்தது. வயதில் நாற்பதை கடந்த முதியவராக பார்த்தேம். நான் நடிப்பேன் என்றார் அப்போது நாம் சிரித்துக் கொண்டேம். பின்னர் இலக்கிய துறையில் இவரது நடிப்பு ஆற்றலைக் கண்டு தள்ளாடும் வயதில் இவ்வளவு திறமையா? என எண்ணிக்கொண்டு இவரைப்பற்றி அறிய சொறிக்கல்முனை கிறிஸ்தவ ஆலயத்திற்கு சென்றேம். அங்கு சென்றபோது இவரைப்பற்றிய ஒரு ஆய்வே செய்யலாம் என எண்ணத் தோன்றியது. நாவிதன்வெளி பிரதேசத்தின் எதிர்கால சந்ததிகளுக்கு இந்த மண்ணில் கலாபூஷணம் எனும் அரசு உயர் விருதை பெற்றுக்கொண்ட ஜி.அன்ரனி பற்றிய பதிவை ஆவணப்படுத்த வேண்டும் என்ற அவா எழுந்தது. அப்போதுதான் இவரிடமிருந்து சில தகவல்களை பெற்றுக் கொண்டேம்.

தனது பதினோராவது வயதில் “பழைய கோட்டை“ எனும் நாடகத்தில் நடிக்க ஆரம்பித்தது தொடக்கம் இன்று வரை மேடை நாடகங்களில் மிகச்சிறந்த கலைஞராக நடித்து வருகின்றார். தனது சொந்த ஊரான யாழ்ப்பாணம் குருநகர் கழகத்தினரால் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் சிறந்த நடிகராக தெரிவுசெய்யப்பட்டார். இவர் நடித்த “கண் திறந்தது“ என்ற நாடகம் சிறந்த நாடகமாக தெரிவு செய்யப்பட்டது. கல்முனையில் நடைபெற்ற நாடகப்போட்டியிலும் சிறந்த நடிகராக தெரிவு செய்யப்பட்டார். ஒரு நாடகத்தை அரங்கேற்றுவதற்கு தேவையான மேடை அலங்காரம், ஆடை அலங்காரம், பின்னணி இசை, ஒப்பனை போன்ற விடயங்களில் மிகவும் ஆர்வமாக சேவையாற்றி பாராட்டுக்களை பெற்றுள்ளார். விசேடமாக ஒப்பனை செய்வதில் அதிக ஆர்வம் கொண்ட ஜி.அன்ரனி அவர்கள் இந்தத் திறமை தனக்கு பரம்பரையானது என்று இப்படி கூறுகிறார்.“காலம் சென்ற எனது அண்ணன் யாழ்நகரில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களால் “ஒப்பனை திலகம்“ என்ற பட்டத்தைப் பெற்றவர். எனது தந்தையும் ஒப்பனை, சித்திரம் போன்ற விடயங்களில் சிறந்து விளங்கியவர். நான் வசிக்கும் சொறிக்கல்முனை என்னும் கிராமத்தில் வருடம்தோறும் இடம்பெறுகின்ற “பாஸ்கா“ நிகழ்விற்கு ஒப்பனை, ஆடை அலங்காரம் செய்து அதில் ஒரு நடிகனாக நடித்தும் வருகின்றேன்” என்றார்.

இவர் கல்வி கற்றுக் கொடுத்த பாடசாலைகளில் பல நாடகங்களை உருவாக்கி மேடையேற்றி மாணவர்களை நாடகத் துறையிலும், நடிப்பிலும் கலை உலகத்திற்கு அறிமுகப்படுத்தியுள்ளார். கல்வி அமைச்சினால் பாடசாலைகளில் நடத்தப்படுகின்ற தமிழ் மற்றும் ஆங்கில தினப் போட்டிகளில் நடுவராக கடமையாற்றியுள்ளார். வில்லியம் சேக்ஸ்பியர் (William Shakespeare), ஜுலியஸ் சீசர் (Julius Caesar) ஒதெல்லோ (Othello), மக்பத் (Magbeth), போன்ற நாடகங்களை பலதடவை பாடசாலைகளில் மேடையேற்றி பலரது பாராட்டையும் பெற்றுள்ளார். சில காலம் அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையில் பகுதிநேர ஆங்கில விரிவுரையாளராக கடமையாற்றிய இவர் அக்காலப்பகுதியில் “மக்பத்“ நாடகத்தை ஆசிரியர்களையும் மாணவர்களையும் கொண்டு மேடையேற்றி பாராட்டையும் பரிசில்களையும் பெற்றுள்ளார்.

யாழ் மாநகர சபையில் தமிழ் மொழிபெயர்ப்பில் மாற்றப்பட்ட “ஜுலியஸ் சீசர்” நாடகத்தின் பிரதான வில்லனான “புரூட்டஸ்“ பாத்திரத்தில் நடித்து பாராட்டையும் விருதையும் பெற்றுள்ளார். யாழ் நகரின் தயாரிக்கப்பட்ட “குத்துவிளக்கு“ எனும் திரைப்படத்தில் ஒரு மிகச் சிறிய பாத்திரத்தில் கதாநாயகனின் நண்பர்களில் ஒருவனாக நடித்த அனுபவம் இன்னும் மறக்க முடியவில்லை என நினைவுபடுத்துகிறார். யாழ் நகரில் இயங்கும் திருமறைக் “கலாமன்றம்“ என்று மன்றத்தின் ஸ்தாபக அங்கத்தவராக இருந்து “களங்கம்“ எனும் நாடகம் பல இடங்களில் மேடையேற்றப்பட்டு இந்தியாவின் திருச்சியில் இந்நாடகம் அரங்கேற்றப்பட்ட போது அந்நாடகத்தில் நடித்த அனுபவம் தனக்கு இன்றும் மறக்க முடியாத அனுபவத்தை தருகிறது. இன்றும் இத்துறையில் ஆர்வத்தோடு ஈடுபடுவதற்கு இவை போன்ற பல அனுபவங்களே எனக்கு உறுதுணையாக இருக்கின்றது என தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.

நாடகத் துறைக்கு அப்பால் ஓவியம் வரைதல், எழுத்துக்கள் வரைதல் போன்ற விடயங்களிலும் இவரது ஈடுபாடு அளப்பரியதாகும். 2008ஆம் ஆண்டு நாவிதன்வெளி பிரதேச செயலகம் நடாத்திய சாகித்திய விழாவில் வாழ்நாள் சேவையாளர் விருது வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்ட திரு. ஜி. அன்ரனி அவர்கள் 2014ஆம் ஆணடு டிசம்பர் மாதம் 14ஆம் திகதி நடாத்தப்பட்ட கலாபூஷணம் அரச விருது விழாவின்போது நாடகத்துறையில் இவர் ஆற்றிய பணிக்காக கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரிவுகளில் இருந்து கலாபூசணம் பெற்ற மூத்த கலைஞர் திரு. அன்ரனி அவர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். எமது பிரதேசத்தில் இருந்து இதற்கு முன்னரும் ஒருவர் அரச கலாபூஷணம் விருது பெற்றதாக அறியக்கூடியதாக உள்ளது. அவர் பற்றிய தகவல்களையும் எதிர்காலத்தில் ஆவணப்படுத்தப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

**ஒரு கலையில் தேர்ந்தவர் கலைஞர். அதை கண்டு ரசித்து ஊக்குவிப்பவர் கலைரசிகர். கலைவல்லுனர் ஒரு கலையை நன்கு கற்று, அதை தொழிலாக கொண்டோ அல்லது குருபோல பயிற்றுவிப்பவராகவோ அல்லது கலையையும் கலைஞர்களின் செயல்திறனையோ விமரிசனை செய்பவராக இருப்பர்.**